
விலை ரூபா: 15.00

Registered as a News paper in Srilanka




# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு

Valampurii

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 20 திங்கட்கிழமை (04.08.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 229

## மனித உரிமை மீறல்கள் அதிகமுள்ள நாடு இலங்கை

### ஆசிய மனித உரிமை மையம் தகவல்

(கொழும்பு)

சார்க் கூட்டமைப்பில் உள்ள நாடுகளில் இலங்கை மிகவும் மோசமான மனித உரிமை மீறல்களைக் கொண்ட நாடு என ஆசிய மனித உரிமை மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஆசிய மனித உரிமை மையம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தென்னாசியப் பிராந்திய கூட்டமைப்பில் உள்ள நாடுகளில் இலங்கையே மிக மோசமான மனித உரிமை மீறல்களை கொண்ட நாடு. தென்னாசிய பிராந்திய நாடுகளின் மனித உரிமைச் செயற்பாடுகளுக்கான சுட்டெண் தரவரிசையில் நாடுகள் பெற்றுக் கொண்ட புள்ளிகளில்,

சிறிலங்கா-52, பங்களாதேஷ்-45, பூட்டான்-43, பாகிஸ் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதம மந்திரிக்கு கொழும்பில் ஏற்பட்ட அதிர்ச்சி

(கொழும்பு)

கொழும்புக்கு சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அதிர்ச்சிச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது, சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்புக்கு வந்திருந்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தைச் வந்தடைந்த அவர், சிறப்பு உலங்கு வானூர்தி மூலம் அங்கிருந்து கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கிருந்து உச்ச பாதுகாப்பு கொண்ட வாகன அணி மூலம் ஜனாதிபதி அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனநாயகத்தை வலுப்படுத்த அரசின் நடவடிக்கை அவசியம்

## சார்க் மாநாடு நேற்று நிறைவு

(கொழும்பு)


இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு, பூட்டான், நேபாளம் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய 8 நாடுகளை உள்ளடக்கிய தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பு ஒன்றியத்தின் 15-வது உச்சி மாநாடு நேற்றுக் கொழும்பில் நிறைவு பெற்றது.

உணவுப் பாதுகாப்பு, எரிபொருள் பாதுகாப்பு, பிராந்திய நாடுகளுக்கிடையில் வர்த்தக மேம்பாடு (12 ஆம் பக்கம் பார்க்க)

## பௌச்சர் கொழும்பில் வலியுறுத்தல்

(கொழும்பு)

**இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மிகுந்த கவலையளிக்கின்றன. ஜனநாயகத்தை வலுப்படுத்த நடவடிக்கை அவசியம் என அமெரிக்க உதவிச் செயலாளர் றிச்சட் பௌச்சர் தெரிவித்துள்ளார். கடத்தல், காணாமல் போதல், சட்ட விரோத கைதுகள் உட்பட தொடர்ந்து செல்லும் மனித உரிமை மீறல்கள் மிகுந்த கவலையளிப்பதாக உள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.** (12 ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கைக்கு இந். ஆயுதம் வழங்குவதை கண்டித்துச் சென்னையில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இலங்கை அரசுக்கு ஆயுத உதவி செய்யும் இந்திய அரசைக் கண்டித்து நேற்றுச் சென்னையில் அனைத்துக் கட்சிகளின் சார்பில் கண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அனைத்துக் கட்சிகள் அனைத்துத் தமிழர் அமைப்புக்கள் கூட்டுக்குழுவின் அமைப்பாளர் பழ.நெடுமாறன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தினை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தொடங்கி வைத்தார்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்தைச் சுற்றிலும் பாதுகாப்பிற்காகப் பெருமளவில் காவல்துறையினர் குவிக்கப்பட்டிருந்தனர். சரியாகப் பிற்பகல் 4 மணிக்கு ஆர்ப்பாட்டம் தொடங்கியது.

ஆர்ப்பாட்டத்தின் போது இந்திய அரசுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பப்பட்டன. (ச)

## கிளிநொச்சி மாவட்டத்திற்குள் இராணுவத்தினர் முன்னேற்றம்

### பிரிகேடியர் உதய நாணயக்கார கூறுகிறார்

மன்னாரில் நிலை கொண்டுள்ள இராணுவத்தின் 58ஆவது படையணியினர் தற்போது தமது நிலைகளிலிருந்து முன்னேறி கிளிநொச்சி மாவட்டத்துக்குள் முன்னகர்ந்துள்ளதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இதன் பிரகாரம் விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டில் உள்ள கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்கள் மட்டுமே படையினரின்கட்டுபாட்டுக்குள் கொண்டுவரப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த இராணுவ பேச்சாளர் மேலும் கூறியதாவது,

ஈழப்போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் அதி சக்தி வாய்ந்த கட்டுபாட்டுத் தளமாக விளங்கும் கிளிநொச்சி (12 ஆம் பக்கம் பார்க்க)

## 16-வது சார்க் மாநாடு மாலைதீவில் நடக்கும்

(கொழும்பு)

16-வது சார்க் உச்சி மாநாடு மாலைதீவில் நடைபெறவுள்ளதாக மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் அப்துல்லாஹ் ஷஹீத் தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகமவுக்கும் மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் அப்துல்லாஹ் ஷஹீத்துக்குமிடையிலான இரு தரப்புச் சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது.

இதனையடுத்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் இத் தகவலை வெளியிட்டார். (ச-5)

## மல்லாவியில் இடம்பெற்ற மோதலில் இராணுவத்தினருக்குப் பாரிய இழப்பு

### சண்டே ரைம்ஸில் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

மல்லாவி நோக்கி கடந்த வெள்ளிக்கிழமை முன்னகர்ந்த படையினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் பெருமளவான படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் காயமடைந்துமுள்ளனர் என்று கொழும்பு ஆங்கில வார ஏடான சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


மல்லாவி நோக்கி கடந்த வெள்ளிக்கிழமை முன்னகர்ந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய எதிர்த் தாக்குதலில் 11 படையினர் கொல்லப்பட்டும் 20றக்கும் அதிகமானோர் காயமடைந்தும் உள்ளனர் என்று படைத் தரப்புத் தெரிவித்துள்ளது.

ஆனால் இம் மோதல்களில் பெருமளவான படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 65றக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர் என்று சுயாதீன தகவல்கள் தெரிவித்துள்ளன.



13 மணி நேரத்திற்கும் அதிகமாக நீடித்த மோதல்களில் 30 படையினர் கொல்லப்பட்டு 60றக்கு அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என்று விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது என்றுள்ளது.

இதேவேளை (12 ஆம் பக்கம் பார்க்க)

# வலம்புரியின் ஏற்பாட்டில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக் கருத்தரங்கு -2008


மக்கள் வங்கியின் அனுசரணையுடன் வடமராட்சி கல்வி வலயத்தின் வழிகாட்டலில் நேற்று பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் மக்கள் வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் மு.சிவநேசன், பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா.இரகுநாதன் ஆகியோர் மாணவர்களுக்கு வழிகாட்டல் கையேடுகளை வழங்குவதையும் கருத்தரங்கில் கலந்து கொண்ட ஒரு தொகுதி மாணவர்களையும் படங்களில் காணலாம்.


ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயத்தின் வழிகாட்டலில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸின் நிதியியல் ஆலோசகர் ந.நாகராசா வழிகாட்டல் கையேட்டை வழங்குவதையும் கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## நல்லூர் உற்சவ கால வீதித்தடை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 6ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதிவரை அரசடிச் சந்திக்கும் 2ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்பட்ட பருத்தித்துறை வீதி, பிராமணக் கட்டுக்குளம் சந்தியில் இருந்து சங்கிலியன் சந்திக்கும் இடைப்பட்ட கோயில் வீதி, செட்டித்தெரு ஒழுங்கையில் இருந்து செட்டித்தெரு ஆகிய வீதிகள் வாகனப் போக்குவரத்துக்காக மூடப்பட்டிருக்கும் என யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார்.

மேலும் பேருந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமை கூடிய வாகனங்கள் ஆனைப்பந்தி சந்தியில் இருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைசந்தையூடாகச் செல்வதற்கும் அதே வேளை பருத்தித்துறை வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர்க் குறுக்கு வீதி வழியாக பேருந்துகளும் சிற்றூர்திகளும் செல்வதற்கு முற்றாக தடை செய்யப்படும்.

வாகனங்களை முத்திரைச் சந்தைப் பகுதியில் சங்கிலியன் சிலைக்கு எதிர்ப்பக்கமாக பருத்தித்துறை வீதியிலும், கந்தர்மடம் சந்திக்கு அப்பால் அரசடி வீதியிலும், அம்மன் வீதி பருத்தித்துறை வீதி சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியிலும், செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பாலும் நிறுத்தி வைக்க முடியும் எனவும் மாநகர சபை ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-6)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 14 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (அ)

## ஆடிப்பூர பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வட்டு.கிழக்கு துறட்டிப்பனை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான ஆடிப்பூர பெருவிழா இன்றுகாலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அம்பிகைக்கு ஸ்ருபனா அபிஷேக ஆராதனைகளும் ருது சாந்தி வைபவமும் நடைபெறவுள்ளது. (ச)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் உடுவில் தெல்லிப்பழை கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட போஷாக்கு வாரப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறும். (ஓ)

## இலங்கையரின் ஆயுட் காலம் 10 வருடங்களால் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையர்களின் ஆயுட் காலம்10 வருடங்களால் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பெண் ஒருவரின் ஆயுட் காலம் 79 வருடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் 4 வருடங்களுக்கு முன்னர் இலங்கை பெண் ஒருவரின் ஆயுட் கால எதிர்பார்ப்பு 65 வருடங்களாகும்.

எட்டு வருடங்களுக்கு முன்னர் 60 வருடங்களாக இருந்த பிரஜை ஒருவரின் ஆயுட் கால எதிர்பார்ப்பு தற்போது 79 வருடங்களாக உயர்ந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிக்கின்றது.

குறுகிய காலப்பகுதிக்குள் பிரஜைகளின் ஆயுட்கால எதிர்பார்ப்பு 10 வருடங்களால் அதிகரித்துள்ள ஆசியாவின் ஒரே நாடு இலங்கையாகும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி மட்டம் உயர்வடைந்துள்ளமை உள்ளிட்ட சில விடயங்களே இலங்கை பிரஜைகளின் ஆயுட் கால எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளமைக்கான காரணம் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான தேசிய ஆலோசகர் டாக்டர் ஹரிஸ் சந்திரகந்தாவல கூறினார். (ச)

## இந்தியப் பிரதமர் சந்திப்பு விவகாரம் மகிந்த-பிள்ளையான் கருத்து முரண்பாடு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் தன்னை சந்திக்க ஏற்பாடு செய்யவில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது துணை இராணுவக் குழுத் தலைவர் பிள்ளையான் சீற்றமடைந்திருக்கிறார் என்று கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பில் தெரியவருவதாவது,

சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்பு வந்துள்ள இந்தியப் பிரதமருடனான சந்திப்புக்கு எப்படியும் ஏற்பாடு செய்யுமாறு துணை இராணுவக் குழுத் தலைவர் பிள்ளையான் மகிந்த ராஜபக்ஷவிடம் கோரியிருந்தார்.

இதன் பிரகாரம் மகிந்தவும் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டு சந்திப்புக்கு ஏற்பாடு செய்ய முயற்சித்துப் பார்த்தார். ஆனால் இந்தி அரச உயர் மட்டத்தினர் இந்தக் கோரிக்கையை நிராகரித்ததுடன் தமது அரசின் உயர் மட்ட அதிகாரிகள் இருவரை பிள்ளையான் குழுவினருடன் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்வதாக அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பிள்ளையான் தரப்புக்கு அறிவிக்க, இந்தியப் பிரதமரை சந்திக்க ஏற்பாடு செய்யாததால் இந்திய தரப்பிலிருந்து எவரையும் தான் சந்திக்கப்போவதில்லை என்று சீற்றமடைந்திருக்கிறார் பிள்ளையான் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-5)

## ஓய்வு பெறும் வயதினுள்ள அதிபர்களின் சேவைக்காலத்தை நீடிக்க கட்டுப்பாடு

(கொழும்பு)

பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியின்றி ஓய்வு பெறும் வயதெல்லையில் இருக்கும் பாடசாலை அதிபர்களின் சேவையை நீடிக்க வேண்டாமென கல்வி அமைச்சு, மாகாண சபை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

ஓய்வு பெறும் வயதெல்லையில் இருக்கும் அதிபர்களை சேவையில் நீடித்துள்ளமை குறித்து அமைச்சுக்கு தகவல் கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்தார்.

பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் மாத்திரமே பாடசாலை அதிபர்களின் சேவையை நீடிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக மாகாண கல்வி அதிகாரிகளுக்கு கல்வி அமைச்சின் செயலாளர் எழுத்து மூலம் அறிவித்துள்ளார். (ச)

# இன்று ஒரு தகவல்

## ஆசை

''எனக்கு வாழ்க்கையில் ஒரே ஒரு ஆசைதான்'' என்றார் ஒருவர். "அது என்ன?'' என்று கேட்டேன்.

''ஆசைகளை ஒழிக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை!'' என்றார் அவர்.

இப்படி ஆசைகளை ஒழிக்கவேண்டும் என்பதையே ஒரு ஆசையாகக் கொள்வது அர்த்தமற்றது! என்கிறார் ஓஷோ என்ற பெரியவர்.

ஆசைகளை ஒழிக்க ஆசைப்பட்டால் அந்த நோக்கம் நிறைவேறாதாம். அதனால் புதிதாக துன்பங்கள் தான் வந்துசேருமாம்.

எந்த ஒரு ஆசையையுமே பூரணமாக நிறைவேற்றிக் கொள்ள முடியாது என்பதை உணர்ந்தால் ஆசைகளை விட்டுவிடலாம்.

அதற்காக, ஆசைகளை விட்டுவிட வேண்டும் என்பதையே ஒரு ஆசையாக வைத்துக்கொண்டு அதற்காக கடுமையான முயற்சிகளும் செய்து கொண்டிருந்தால் எந்தக் காலத்திலும் ஞானோதயம் வரப்போவதில்லை. அதற்குப் பதிலாக துன்பம் தான் வந்து சேரும் என்பது அவரின் கருத்து.

ஒரு ராஜா மனம் அமைதியில்லாமல் தவித்துக் கொண்டிருந்தார். அதற்கு பலவழிகளில் முயற்சிகள் செய்து பார்த்தார். ஒன்றும் சரிவராததால் கடைசியாக ஒரு வேதாந்தியைத் தேடிப்போனார்.

"ஐயா... எனது துன்பங்களிலிருந்து விடுபட ஏதாவது ஒரு வழியிருந்தால் சொல்லுங்களேன்'' என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு அந்த வேதாந்தி ஒரு வழிசொன்னார். அதாவது உன் ராஜ்யத்துக்குள் போதும் என்ற மனத்துடன் வாழும் ஒருவனைக் கண்டுபிடித்து அவனுடைய சட்டையை நீ வாங்கிப் போடவேண்டும். அப்படிப் போட்டுக் கொண்டால் உனது துன்பம் தீரும்.'' என்றார் உடனே ராஜாவுக்கு மிகுந்த மகிழ்ச்சி.

அரண்மனையிலிருந்த அத்தனை பேரையும் ஆளுக்கொரு திசையில் தேடச்சொன்னார். எங்கேயோ தேடி கடைசியாக ஒரு ஆளைக் கண்டுபிடித்தார்கள். அவன் போதுமென்ற மனத்தோடு இருப்பவன் தான்.

ஆனால் அவனிடம் ''சட்டை'' எதுவும் இல்லை. இடையில் கட்டி யிருக்கும் துண்டே போதும் என்ற மனத்துடன் அவன் வாழ்ந்து கொண்டிருந்தான்.

''சட்டை'' இருந்தால் தானே ராஜா வாங்கிப் போட முடியும் அந்த வேதாந்தி ஏன் அப்படி சொன்னார் ஏன்பது இப்பொழுதுதான் ராஜாவுக்குப் புரிந்தது. இதுவரைக்கும் சொன்னதெல்லாம் ஞானமார்க்கத்தை தேடிக்கொண்டிருப்பவர்களுக்கான தகவல்.

இன்றைய இளைஞர்கள் இதைக்கேட்டு நமக்கு ஆசையே வேண்டாம் என்ற முடிவுசெய்தால் வாழ்க்கையில் முன்னேறவே முடியாது. நமது முயற்சிக்குகெல்லாம் ஆசைதான் தூண்டுகோல்.

அதனால் எல்லா ஆசைகளையும் போட்டுக் குழுப்பக் கூடாது. பேராசை ஒன்றுதான் நமக்குத் தேவையில்லாதது. நாம் ஆசைப்படுவதிலும் ஒரு நியாயம் இருக்க வேண்டும். ஒரு ஆள் கடைவைத்து வியாபாரம் செய்தான். அவனுக்கு நிறையப்பணம் சம்பாதிக்க வேண்டும் என்று பேராசை.

திடீரென்று ஒருநாள் அவன் நோய்வாய்ப்பட்டு இனிமேல் பிழைக்கிறது கஷ்டம் என்ற நிலைமையில். மரண தறுவாயில் இருந்தான். இவனைச் சுற்றி சொந்த பந்தமெல்லாம் உட்கார்ந்திருந்தனர்.

இவன் மெதுவாக கண்ணைத்திறந்து ''என்வீட்டுக்காரி எங்கே'' என்றான் "இதோ இருக்கிறேன்!'' என்றார் அந்த அம்மா. "பிள்ளைகள் எங்கே?'' என்றான். "அவர்களும் பக்கத்தில் தான் இருக்கிறார்கள் நீங்கள் கவலைப்படாமல் இருங்கள்'' என்றார் அந்த அம்மா.

அவன் மெதுவாக கஷ்டப்பட்டு வாயைத்திறந்து "அடப்பாவிகளா? எல்லோரும் இங்கேயிருந்தால் அங்கே கடையை யார் கவனிக்கிறது?'' என்றானாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# முல்லை மாவட்டத்தில் ஒரு இலட்சம் பேர் இடப்பெயர்வு, உணவு வழங்குவதில் சிக்கல்

## செயலக அதிகாரிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைப் படையினர் மேற்கொண்டுவரும் தொடர் எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

28ஆயிரத்து 848 குடும்பங்களைச் சேர்ந்த 1 இலட்சத்து 19ஆயிரத்து 453பேர் தமது வாழ்விடங்களை விட்டுக் கடந்த திங்கட்கிழமை வரை இடம்பெயர்ந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பார்த்தீபன் தெரிவித்துள்ளர். திரு முறிகண்டியில் இடம் பெற்ற இடர்காலக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவுப்பொருட்கள் மற்றும் குடிநீர்த் தாங்கிகள் வவுனியாவிலிருந்து எடுத்து வருவதில் சிக்கல்கள் காணப்படுவதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போதைய தாக்குதல்களால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 3860 ஏக்கர் பயிர் செய்யப்பட்ட நிலங்கள் அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு, துணுக்காய் உள்ளடங்கிய பிரதேசத்தில் 3100ஏக்கர் சிறுபோக நெற்செய்கை, 158 ஏக்கர் மேட்டு நிலப் பயிர்ச்செய்கை, 255 ஏக்கர் மரக்கறிப் பயிர்ச்செய்கை, 347 ஏக்கர் பழப்பயிர்ச்செய்கை என்பனவே அழிவடைந்துள்ளன. (அ-5)

## ஆடிப்பூர உற்சவம்

அராலி ஆவரம் பிட்டி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆடிப்பூர உற்சவம் இன்று திங்கட்கிழமை பகல் 10 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி பூசையும் அன்னதானமும் நடைபெறும்.

மாலை 2 மணிக்கு பொங்கலை தொடர்ந்து 4.30 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று அம்பாள் திரு வீதி உலா வரும் திருக்காட்சி நடைபெறும். (அ)

* * *

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயிலில் ஆடிப்பூரத் திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அம்பிகைக்கு விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்று, 10 மணிக்கு ''ருது சோபன வைபவமும்'' தொடர்ந்து திருவூஞ்சல் பாடலும் காட்சியும் அடியார்கள் காணிக்கை செலுத்தும் வைபவமும் நடைபெற்று, சிவகாமி அம்பாள் அழகிய பூந்-தண்டிகையில் திருவீதியுலா வலம் வ்ருதலும் நடைபெறவுள்ளது.

* * *

கோண்டாவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீ முத்துாரி அம்மன் திருக்கோயிலின் ஆடிப்பூரத் திருவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அம்பிகைக்கு விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்று 4 மணிக்கு ருது சாந்தி உற்சவமும் தொடர்ந்து திருவூஞ்சல் பாடலும் காட்சியும் இடம்பெற்று அம்பாள் வீதியுலா வருதலும் நடைபெறவுள்ளது. (அ-12)

## இராசிபலன்

04.08.2008
(ஆடி 20, திங்கட்கிழமை)
திருதியை பிற்பகல் 01.19 மணிவரை
பூரம் மாலை 06.16மணிவரை
இராகுகாலம் 07.34-09.04மணிவரை
சுபநேரம்-12.04-01.34 மணிவுரை
நாகசதுர்த்தி விரதம், ஆடிப்பூரம்

| | |
|---|---|
| மேடம் | வியாபார விருத்தி, சிறுவியாதி, சொத்துப்பிணக்கு, தனவிரயம். |
| இடபம் | கல்வியில் ஆர்வம், சுபசெலவு, தாய்வழி உறவு, மனச்சஞ்சலம். |
| மிதுனம் | கூட்டுமுயற்சி, பிரயாண நன்மை, போசனசுகம், சுபநிகழ்வு. |
| கடகம | கடினவார்த்தை, வேலைச்சுமை, மரியாதைக்குறைவு, முயற்சிதாமதம். |
| சிங்கம் | ஜனவசியம், பெரியோர் சந்திப்பு, தேகநலன், தெய்வசிந்தை. |
| கன்னி | அமைதிக்குறைவு, சுபசெலவு, கௌரவக்குறைவு, முயற்சிதாமதம். |
| துலாம் | தனலாபம், காரியஅனுகூலம், மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| விருச்சிகம் | நிலைமாற்றம், அதிகாரம், கடின உழைப்பு, போசனசுகம். |
| தனுசு | புதியதிட்டமிடல், செய்தொழில் விருத்தி, வீண்பயம், முய்ற்சிதாமதம். |
| மகரம் | வாகனபயம், எதிரிகள் தொல்லை, காரியதடங்கல், பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | நல்லவரவேற்பு, குடும்ப மகிழ்ச்சி, முயற்சி பலிதம், திடீர்பயணம். |
| மீனம் | நல்லசம்பவம், முயற்சிகை கூடும், தேகநலன், பாராட்டு. |

வளவன்

# புலிகளின் கட்டளைத் தளபதி தீபன் மன்னார் களமுனைக்கு நகர்த்தப்பட்டார்

## லக்பிம வார ஏடு தகவல்

வவுனியா-மன்னார்கள முனைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னணி கட்டளைத்தளபதிகளில் ஒருவரான கேணல் தீபன் நகர்த்தப்பட்டுள்ளார் என்று கொழும்பிலிருந்து வெளி வரும் லக்பிம ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர் பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனிக்குளத்தில் மோதல்கள் மிகவும் தீவிரமடைந்துள்ள நிலையில் வவுனியா-மன்னார் களமுனைக்கு விடுதலைப்புலிகளின் முன்னணி தளபதிகளில் ஒருவரான கேணல் தீபன் நகர்த்தப்பட்டுள்ளார்.

வடபோர் முனை கட்டளைத் தளபதியாக பணியாற்றி வந்த கேணல் தீபன் கிளாலி- முகமாலை-நாகர் கோவில் களமுனைகளில் பல தாக்குதல்களை வெற்றிகரமாக முறியடித்திருந்தார் என்பதோடு சிறிலங்கா இராணுவத்தினருக்கு பாரிய இழப்புகளையும் ஏற்படுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2001ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ''தீச் சுவாலை'' நடவடிக்கையை முறியடித்ததில் கேணல் தீபன் முக்கிய பங்காற்றியிருந்தார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# வடக்கில் மாகாணசபையை நிறுவுவது சாத்தியமில்லை - சிவாஜிலிங்கம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை முற்றாகத் தோற்கடித்து வடக்கில் மாகாணசபைகளை நிறுவப் போவ



தாக மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களில் எவ்வித சாத்தியப்பாடுமில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் ஜனநாயகம் நிறுவப்பட்டுள்ளதாகக் கூறப்படும் கருத்துக்களில் எவ்வித உண்மையும் இல்லை .எனவும், குண்டர்களின் ஆட்சியே தற்போது கிழக்கில் கா ணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வருட இறுதிக்குள் தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து வடக்கை மீட்டெடுத்து முடியுமானால் தேர்தல்களை நடத்துமாறு தாம் அரசாங்கத்திற்குச் சவால் விடுப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில அமைச்சர்கள் யுத்தத்தை இந்த வருட இறுதிக்குள் முடிவுக்குக் கொண்டுவர. முடியும் எனக் குறிப்பிட்ட போதிலும் இராணுவத் தளபதி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பில் உறுதியான காலக்கெடு ஒன்றை வழங்க முடியாதெனத் தெரிவித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அரசியல் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திடீர் பொதுத் தேர்தல் ஒன்றை நோக்கி செயற்பட்டுக் கொண்டிருப்பதாக சிவாஜிலிங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# சார்க் மாநாடு காரணமாக ஹோட்டல்களுக்கு பாரிய இழப்பு

(கொழும்பு)

கடந்த 10 நாட்களில் கொழும் பின் ஹோட்டல்களுக்குச் சுமார் 100 மில்லியன் ரூபாய்கள் நட்டம் ஏற் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 15ஆவது "சார்க்" மாநாட்டை முன்னிட்டு ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலையே இதற்கான காரணம் என ஹோட்டல் உரிமையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

"சார்க்" மாநாட்டின் காரண மாக கடந்த ஜூலை மாதம் 26ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 4ஆம் திகதி வரையில் திருமண வைபவங்கள் மற்றும் ஏனைய கூட்டங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டன.

அத்துடன் இலங்கை வங்கியின் தலைமையகம் உட்பட்ட ஹோட்டல் பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டமையானது ஹோட்டல்களுக்கு பாரிய நட்டங்களை உருவாக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கலதாரி ஹோட்டல் தகவலின்படி இந்த 10 நாட்களுக்குள் தமக்கு 20 மில்லியன் ரூபாய் நட்டமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இன்றுடன் அது 30 மில்லியன்களாக உயரும் என அந்த ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-6)

## பயண அனுமதியை யாழ்.கல்வி வலயத்தில் இன்று பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

கல்வியியல் கல்லூரிகளில் பயிற்சி முடித்து வெளிமாவட்டங்களில் நியமனம் பெற்ற ஆசிரியர்களில் பயண அனுமதி பெறுவதற்கு விண்ணப்பித்தவர்கள் தமக்கான பயண அனுமதி, கப்பல் ரோக்கன் என்பவற்றை இன்று காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலயத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ை

## ஆங்கில ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆங்கிலபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 6 ,7 ஆம் திகதி களில் நுணாவில்கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதெனவும்அனைத்து வகுப்புக்களிலும் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களை இச் செயலமர்வில் பங்குபற்றுமாறும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுள்ளார். (அ-29)

## இ.ச.பேரம்பலம் நிறுவனம் துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பு

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வழங்குவதற்கென யாழ் E.S.P. நாகரட்ணம் (E.S.P. நிறுவனம்) இரு ஆண்களுக்குரியதும் இரு பெண்களுக்குரிய துமான துவிச்சக்கர வண்டிகளை அதிபர் க. அருந்தவபாலனிடம் கையளித்துள்ளார். (அ-29)

## முன்பள்ளிகளுக்கு தளபாடங்கள் கிறிஸ்தவ ஒன்றியம் கையளிப்பு

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தினரால் சாவகச்சேரி தென் இந்திய திருச்சபை மண்டபத்தில் வைத்து கொடிகாமம் பிரதேச சபைக்குட்பட்ட ஆறு முன்பள்ளிகளுக்கான தளபாடங்கள் கையளிக்கப்பட்டது.

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத் தலைவர் எஸ்.கே.கதிர்காமம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஒன்றியத்தின் செயலாளர் வி.பத்மதயாளன், பொருளாளர் இ.ஜே.ஜெயரட்ணம் அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இதற்கான சகல ஒழுங்குகளையும் தென்னிந்திய திருச்சபையின் குரு வணக்கத்துக்குரிய ரி.எச்.வசந்தகுமாரும் சபையினரும் மேற்கொண்டனர்.

வள்ளுவர், அறிவொளி,குட்மன், ஞானதீபம், கொடிகாமம் மத்தி ஆகிய முன்பள்ளிகளே தளபாடங்களைப் பெற்றுள்ளன. (அ-29)

## நிறைவு விழாவும் கண்காட்சியும்

ILO நிறுவனமும் பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து நடாத்திய பனைவள கைப்பணி பயிற்சியின் நிறைவு விழா நிகழ்வும் கண்காட்சியும் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கட்டப்பிராய் சரஸ்வதி சனசமூக நிலையத்தில் செயலாளர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகிழக்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ், சிறப்பு விருந்தினர்களாக வலி கிழக்கு பிரதேசசபைச் செயலாளர் த.நடராசா, கோப்பாய் மகாவித்தியாலய அதிபர் பி.சிவானந்தராசா, E.L.R.E.P இணைப்பாளர் இ.சர்வானந்தா, பனை அபிவிருத்திச் சபை நிர்வாக உத்தியோகத்தர் சி.புவனேசமூர்த்தி, கல்வியங்காடு கிராம அலுவலர் சு.முத்துக்குமாரசாமி, பனை அபிவிருத்திச் சபை விரிவாக்கல் உத்தியோகத்தர் கா.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொள்வர். (அ)

# தொழிற்பயிற்சி மாணவர்களுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வூஸ்க் (WUSC) நிறுவனம் அறவழி, சர்வோதயம்,ஊற்று,தொழிற்துறைத் திணைக்களம் ஆகிய பங்கான நிறுவனங்களுடன் இணைந்து நடாத்திய தரமான தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்ளக்கூடிய தொழில்சார் பயிற்சியையும், வெளிக்களப் பயிற்சியையும் முடித்து வெளியேறிய 110 பயிலுநர்களிற்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் 11 மணி வரை யாழ்.கச்சேரி வளாக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வூஸ்க் வடபிராந்திய பிரதி வெளிக்களப் பணிப்பாளர் வே.ஜெயராஜசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், சிறுவர் பாதுகாப்பு நிதிய பிராந்திய முகாமையாளர் க.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (அ-6)

# ஆட்கள் இல்லாத வீடுகளில் ஓடுகள் களவெனப் புகார்

(காரைநகர்)

காரைநகர் தோப்புக்காட்டுக் கிராமத்தில் ஆட்கள் இல்லாத வீடுகளில் ஓடுகள் களவாடப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, காரைநகர் தோப்புக் காட்டுக் கிராமத்தில் உள்ள ஆட்கள் குடியிருப்பற்ற இரு வீடுகளில் ஓடுகள் களவாடப்பட்டுள்ளது. இதுதொடர்பாக கடந்த வாரம் ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் முறையிடப்பட் டுள்ளது .

சுமார் ஆயிரத்து ஐந்நூற்றுக்கும் அதிகமான ஓடுகள் இவ்வாறு களவுபோயுள்ளன.

கடந்த சிலவாரங்களில் காரைநகர் பனை அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான கட்டடத்தின் சுமார் முப்பதிற்கும் மேற்பட்ட கூரைத் தகடுகள் மற்றும் காரைநகர் பலகாட்டுக் கிராமத்தில் இரு வீடுகளில் சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட ஓடுகள் களவு போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-246)

# கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி கன்னியர்மடம்,மத்தியகல்லூரி சம்பியன்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினால் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே யாழ்.மாவட்டத்தில் கூடைப்பந்தாட்டத்தை அறிமுகப்படுத்திய Dr.W.R.HOLMS ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட 19 வயதுக்குட்பட்ட ஆண்,பெண் அணிகளுக்கான இறுதிப் போட்டிகள் சனிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபரும் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவருமாகிய N.A. விமலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதலாவதாக இடம்பெற்ற பெண்களுக்கான போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரி அணியினை எதிர்த்து யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட அணி மோதியது. இப் போட்டியில் 20-01 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட அணி வென்று சம்பியனாகியது.

ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ். புனித பரியோவான் கல்லூரி அணியினை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதியது. இப் போட்டியில் 54-41 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ்.மத்திய கல்லூரி அணி வென்று சம்பியனாகியது.

மேற்படி போட்டிகளில் வெற்றிபெற்ற அணிகளுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.போதனா வைத்தியசாலை ஓய்வுபெற்ற சிரேஷ்ட தாதி உத்தியோகத்தரும், சமாதான நீதவானும், யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவனுமாகிய த. சிவலிங்கம் சம்பியன் கிண்ணங்களை வழங்கிக் கௌரவித்தார். (அ-27)

## பெண்ணைக் கடத்த முயன்ற மூவரை தடுப்புக்காவலில் வைக்க உத்தரவு

(பருத்தித்துறை)

யுவதி ஒருவரைக் கடத்த முயற்சித்த மூவர் பருத்தித்துறை நீதிமன்றத்தால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் மூவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

உடுப்பிட்டியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்து கொண்ட இளைஞர் குழுவொன்று அங்கிருந்த யுவதி ஒருவரைக் கடத்த முயற்சித்த விடயம் கைகூடவில்லை. இறுதியில் மூவர் பொலிஸாரிடம் வகையாகச் சிக்கிக் கொண்டனர். பொலிஸார் மூவரையும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர்செய்தனர். மூவரையும் 6 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவிட்டதோடு இப்பெண் கடத்தல்முயற்சியில் ஈடுபட்ட ஏனைய மூவரையும் கைதுசெய்து மன்றில் ஆஜர்ப்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ-52)

## தாச்சி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். இலங்கை வங்கியினதும், வர்த்தக வங்கியினதும் ஆதரவுடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடாத்தும் 13 ஆவது மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டி தாவடி ஸ்ரீகாளி அம்மாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் நாளை செவ்வாய்க்கிழமை 4.30 மணிக்கு உடுவில்- உதயசூரியன் விளையாட்டுக் கழகம் எதிர் மயிலிட்டி -நியூகிற் விளையாட்டுக் கழகமும், நாளை மறுதினம் புதன்கிழமை 4.30 மணிக்கு நவாலி -சென்றொக் விளையாட்டுக் கழகம் எதிர் மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (அ)

## தொகை மதிப்பு செயலமர்வு

தென்மராட்சிகல்விவலயப்பாடசாலைகளின் 2008 க்கான தொகை மதிப்பு செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை8 மணிக்கு சாவ.இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் பாடசாலை அதிபரும் தொகை மதிப்பு வேலைக்குப் பொறுப்பான ஆசிரியரும் தவறாது கலந்துகொள்ள வேண்டும் என்று தென்மராட்சி வவயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுள்ளார். (அ-29)

## கலாசாரப் பேரவை நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி கலாசாரப் பேரவையின் ஆண்டு பொதுக்கூட்டம் கடந்த 30ஆம் திகதி தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

புதிய நிர்வாக சபைத் தெரிவில் தலைவராக பி.செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன், செயலாளராக-கலாசார உத்தி.-க.ராசதுரை, பொருளாளராக சி.மதீஸ்வரன் ஆகியோருடன் 18 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (அ-29)




## ஆடிப்பூர திருவிழா

தெல்லிப்பழை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான வருடாந்த ஆடிப்பூர திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து ருது உற்சவம் நடைபெற்று அம்பாள் திருவீதி உலாவரும் காட்சிஇடம்பெறும். (அ)

## கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தத் தீர்மானம்

பருத்துத்துறை நகர சபைக்குட்பட்ட கட்டாக்காலி கால் நடைகளால் வீதி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நகரசபை அலுவலகம் மேற்கொள்ள வேண்டுமென அண்மையில் நடைபெற்ற பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (அ-35)

## இயந்திரம் திருத்தப் பயிற்சி

நெக்டெப் திட்டத்தின் கீழ்கடற்றொழிலாளருக்கு வெளியிணைப்பு படகு இயந்திரம் திருத் தல் தொழிற்பயிற்சிக்கான அனுமதி கிடைத்துள்ளதாக பருத்தித்தறை கடற்றொழில் பரிசோதகர் தெரிவித்துள்ளார். (அ-35)

## தரிப்பு நிலையம் மாற்றம்

இதுவரை காலமும் புலோலி தெற்கு சிங்கநகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பருத்தித்துறை பிரதேச சபைக்கு சொந்தமான பிரேத வண்டி அப்பகுதி மக்களின் அபிப்பிராயத்திற்கேற்ப பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-35)

## உள்ளூராட்சி வாரவிழா


(மருதங்கேணி)

பருத்தித்துறைபிரதேசசபை உள்ளூராட்சி வாரவிழாஎதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு திக்கம் கலாசார மண்டபத்தில் ச.சந்திரமோகன் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம. வசந்தகுமார் கலந்துகொள்கிறார். (அ-35)









கரித்தாஸ் -கியூடெக் நிறுவனமும் உலக உணவு விவசாய நிறுவனமும் இணைந்து புத்தூர் விவசாயிகளுக்கு உரவகைகள், விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்ட நிகழ்வில் புத்தூர் விவசாய போதனாசிரியர் பாலகிருஷ்ணன் கருத்துரை வழங்குவதையும், கரித்தாஸ் -கியூடெக் திட்ட இணைப்பாளர் ப.அனீதன் பயனாளிகள் பட்டியலை வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பயனாளிகளையும் படங்களில் காணலாம்.

# நோத்முதல் கோபல்லவா வரை 57



### இலங்கையில் நடந்த எதிர்க்கிளர்ச்சி

மொறட்டுவவிலுள்ள இதாமா என்ற ஊரில் ஆரம்பக்கல்வி பயின்ற பர்ணாந்து இளமையிலே ஆள்பதி எட்வேட் பாண்ஸ் அவர்களுடைய மெய்க்காப்பாளரோடு சேர்ந்து ஊர்சுற்றி உல்லாசமாக பொழுதுபோக்குவாராயி னர். அக்காலத்திலேயே வலியவராலும் உத்தியோகத்தராலும் நசுக்கப்பட்ட ஏழைகள் மீது அவருக்கு இரக்கம் உண்டாகியது. அதனால் அவர் ஏழைகளுக்காகப் பாடுபடுவது வழக்கம். அதனால் அவ்வூர் கிராமதிகாரி அவரைச் சவுக்கால் அடித்துவிட்டார். சவுக்கடிபட்ட பர்ணா ந் துவுக்கு ஆத்திரமுண்டாகவே அவர் கிராமதிகாரியைக் கல்லால் எறிந்து காயப்படுத்தினார். இதுவே அவருடைய வாழ்க்கையில் ஏற்ப்பட்ட கன்னிப் போரும் திருப்பமுமாகும்.

கிராமதிகாரியைக் காயப்படுத்திய பின் வீட்டை விட்டோடி மலைநாடுகளில் தமது உறவினர் வீடுகளில் உண்டு, ஐரோப்பிய தோட்ட முதலாளிகளுடனும், ஊவாவிலிருந்த பட்டாளத்தாருடனும் வேட்டையாடிக் காலங் கழிப்பாராயினர். அக்காலத்தில் ஓர் ஏழையின் பொருட்டுப் பொலிஸ் நீதிபதியை இரந்து கேட்ட போது அவர் மனமிரங்காமையால் அவர் வீட்டை உடைத்துப் பொருட்களைச் சூறையாடிப் பழிவாங்கினார். இதற்காகக் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்ட போது, அங்குள்ள பிற கைதிகளையும் விடுவித்துத் தாமும் சிறையை விட்டு வெளியேறினார். வெளியேறியவர் மறுபடியும் கைதுசெய்யப்பட்டுச் சிறையிலிடப்பட்டதும் மீண்டும் சிறையை உடைத்து வெளியேறிவிட்டார்.

இதனால் அடங்காப்பிடாரி எனப் பிரித்தானியரால் பிரகடனப்படுத்தப்பட்டார். அவரை எங்கே கண்டாலும் உடனே சுட்டுக் கொல்லும்படி பொலிசுக்காரருக்கு உத்தரவு கிடைத்தது. பர்ணாந்துவைக் கொன்று பட்டியுயர்த்திக் கொள்ளப் பொலிசுக்காரர் படாத பாடுபட்டார்கள். அக்காலத்தில் பர்ணாந்துவின் பெயர் ஒவ்வொரு வீட்டிலும் வழங்கிற்று. றொபின்கூட் என்ற வீரனைப் போலப் பர்ணாந்துவும் 'புறான் அப்பு' எனச் செல்லமாக அழைக்கப்பட்டார்.

### மீள் பார்வை

புறான் அப்பு தனது நண்பர்களை இரகசியமாக ஒன்று திரட்டி வெள்ளைக்காரர் வீடுகளைச் சூறையாடி ஏழைகளுக்கு உதவுவதில் ஈடுபடுவாராயினர். நாட்டிலிருந்து வெள்ளையரைத் துரத்துவதில் நாட்டங் கொண்ட அவர் மகியங்கனையில் இருந்த புத்த பிக்குகளுடனும் முதியங்கனையில் இருந்த பிக்குகளுடனும் இரகசியமாகத் தமது கருத்தைத் தெரிவித்தார். ஆள்பதி அவர்கள் புத்த சமயத்துக்கு ஆதரவளியாதமையால் ஆத்திரப்பட்டிருந்த பிக்குமாருக்குப் புறான்அப்பு வரப்பிரசாதமாய் இருந்தார். ஆறடி உயரமும் க வர்ச்சிகரமான தோற்றமும் உள்ள புறான் அப்புவைப் பிக்குக்ள் ஆசிர்வதித்தார்கள். பொதுமக்கள் ஆதரவளித்துப் பின்தொடர்ந்தார்கள். அவர்கள் வெள்ளைக்காரருக்கு எதிராகக் கொடியுயர்த்தி யுத்தத்துக்கு ஆயத்தமானார்கள்.

கண்டி, குருணாகல், அநுராதபுரம், மாத்தளை ஆகிய இடங்களுக்கூடாக அணிவகுத்துச் சென்றவருக்கு எங்கும் அணி அணியாக ஆதரவு கிடைத்தது. இளைஞர் பலர் வரிசை வரிசையாக அவருடன் சேர்ந்தார்கள். அவருடைய பெருமிதத்தையும் தியாகத்தையுங் கண்ட பெண்கள் அவரை மணம் செய்ய விரும்பினார்கள். அவர் தம்புல என்ற இடத்தில் சென்றபோது அவருக்கு இராச கௌரவம் ஏற்பட்டது. அவ்வூரினர் அவரை வெகுவாகக் கொண்டாடி 20.07.1848இல் அவரை முடி சூட்டி அரசனாக்கினார்கள். அவ்வமையம் '67 பிக்குகள் பிரித் கிரியை செய்து ஆசி வழங்கினார்கள். மகுடாபிடேகஞ் செய்து முடிசூட்டியருளிய குட்டப்பொல உனான்சே என்ற தேரோ அரசனுக்குப் பாலசிங்க என்ற பெயரிட்டு வெற்றிக் கொடியுயர்த்தி வழிவிட்டார்.

ரத்வத்தை பண்டா என்ற பெரியாரைத் தமது அதிகாரராகக் கொண்ட பாலசிங்க மன்னன் தமக்கு உதவியாக கரைநாட்டுச் சிங்களத் தலைவர்களைச் சிற்றரசராக முடிசூட்டினார். தெற்கு நோக்கிப் படையெடுத்த பாலசிங்க மன்னன் மாத்தளையில் இருந்த பிரித்தானியரின் கோட்டையை 28.7.1848 இல் கைப்பற்றினார். அதனால் முரசுகள், கொம்புகள், சங்குகள் ஊதியொலிக்க; துவக்குகள் வெடிதீர, ஈட்டிகள் வாள்கள் ஏந்திய இளைஞர் அணி வகுக்கப் பாலசிங்க கண்டி மன்னன் எனப் பேரறிவித்தல் செய்யப்பட்டார். இவ்வித கோலாகலங்களோடு பரிவாரங்கள் புடைசூழ அட்டதிக்கும் புகழ்பெற்ற பாலசிங்க மன்னன் கண்டியை நோக்கிப் போன வழியில் பிரித்தானிய படைகள் அவரை எதிர்த்தன. படைப் பயிற்சியும் பலமுள்ள ஆயுதங்களும் இல்லாத பாலசிங்க மன்னனைப் பிரித்தானியப் படைகள் பிடித்துக் கொண்டனர்.

பாலசிங்க மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் பல. 1.மன்னன் எனக் கூறியமை.2. கலகஞ் செய்தமை,3. யுத்தஞ் செய்தமை, 4. கொடியுயர்த்தியமை. இவையாவும் மாட்சிமை தங்கிய விக்டோரிய மகாராணியாருடைய அதிகார மேன்மைக்கு இழுக்கு என வெள்ளையர் கூறினர்.

நிலைமையைச் சமாளித்துக்கொள்ள வகையறியாத ஆள்பதி அவசரத்தில் இராணுவச் சட்டத்தைப் பிரகடனஞ் செய்தார். கண்டியிலிருந்து புறப்பட்டுப் போன ஆங்கிலேயர் படைகள் வழியிற் கண்ட பொதுமக்களைத் துவக்காற் சுட்டுக்கொன்றும், தூக்கில் இட்டுக்கொனறும்,சவுக்காலடித்துத் துன்புறுத்தியும் பழிவாங்கினார்கள். பிரதம நீதிபதியாய் இருந்த அன்ரனி ஒலிபன்ற் என்பாரும், சட்டத்துறை நாயகமும் கலகக்காரரைத் துன்புறுத்தக் கூடாது எனவும் அப்படிச் செய்தால் தாம் பிரதம நீதிபதிப் பதவியை விலகல் செய்வதாக அவர் கூறியும் அதனைச் செவிமடுக்காத ஆள்பதி கலகக்காரருள் புறான் அப்புவையும், கொங்கல்ல கொ ட பண்டாவையும், குட்டப் பொல உனான்சே என்ற புத்த பிக்குவையும் சுட்டுக்கொல்ல உத்தரவிட்டார். (தொடரும்)

**க.சி.குலரத்தினம்**








கோப்பாய் பிரதேச குடும்ப முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அரங்கினூடாக கற்பித்தல் மூன்றாவது தொடர்பயிற்சி உரும்பிராய் கிட்ஸ்பாக் முன்பள்ளி நிறுவனத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அரங்க செயற்பாட்டுக் குழுவைச் சேர்ந்த கு.மகிழ்ச்சிகரன் செயற்பாட்டினை வழிநடத்துவதனை முதலாவது படத்திலும். உற்சாகமாக செயற்பாட்டில் கலந்து. மகிழ்ந்து கற்கும் முன்பள்ளி ஆசிரியர்களை ஏனைய படங்களிலும் காணலாம்.

# 19 ஆம் நூற்றாண்டு 9

# ஈழத்துத் தமிழ் இலக்கியம்



மிஷனரிமாரைத் தொடர்ந்து சுதேச அறிஞர்கள் தமிழிலுள்ள பல நூல்களை அவ்வப்போது ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டனர்.

அக்காலத்தில் வெளியான ஆங்கில இதழ்களிலே தமிழ் நூல்களின் பகுதிகள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து தமிழறியாத ஆங்கிலேயருக்கு எமது இலக்கியச் சிறப்பைப் புலப்படுத்த முயன்றனர். கு.முத்துக்குமாரசுவாமியின் அரிச்சந்திர நாடக மொழிபெயர்ப்பு, பிறிற்றோவின் யாழ்ப்பாண வைபவமாலை மொழிபெயர்ப்பு முதலானவை சிறப்பாகக் குறிப்பிடக் கூடியவை.

திருமுருகாற்றுப்படை, கந்தபுராணத்தின் சில பகுதிகள், திருக்கோவையார், தாயுமானவர் பாடல்கள், குறிஞ்சிப் பாட்டு, பொருநராற்றுப்படை முதலியன 19ஆம் நூற்றாண்டில் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மொழிபெயர்க்கப்பட்டமை மொழிபெயர்ப்புத் துறையிலே ஈழத்தவர் காட்டிய ஆர்வத்தினைப் புலப்படுத்துகின்றது.

தமிழ் மொழியில் இருந்து ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டமை போன்று ஆங்கிலத்தில் இருந்தும் தமிழுக்கு நூல்களும் கட்டுரைகளும் தனிப்பாடல்களும் இக்காலப் பகுதியிலே மொழிபெயர்க்கப்பட்டன.

பைபிள் மொழிபெயர்ப்பில் ஆறுமுகநாவலரின் பங்கு மகத்தானது. மிஷனரிமாரின் கிறிஸ்தவ சமயச் சார்பான பல நூல்களையும் பிரசுரங்களையும் மொழி பெயர்த்து அவ்வப்போது வெளியிட்டனர்.

கெலக் விசுவநாதபிள்ளை, ஜே.எம். எஸ் வேலுப்பிள்ளை, தி.த. சரவணமுத்துப் பிள்ளை முதலியோர் ஆங்கிலத்திலேயிருந்து பலவற்றைத் தமிழுக்கு மொழிபெயர்த்தவர்களிற் குறிப்பிடக்கூடியவர்கள்.

தமிழ்- ஆங்கில, ஆங்கில- தமிழ்மொழி பெயர்ப்புக்கள் போலவே வ டமொழி நூல்கள் பலவற்றை இக்காலத்து அறிஞர்கள் மொழி பெயர்த்துத் தந்துள்ளனர்.

நல்லூர் சரவணமுத்துப் புலவர், நீர்வேலி சங்கரபண்டிதர், சுன்னாகம் நாகநாதபண்டிதர், புலோலி வ. கணபதிப்பிள்ளை முதலியோர் வடமொழியிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்தவர்களில் விதந்து குறிப்பிடக் கூடியவர்கள்.

இக்காலப் பகுதியிலே மொழிபெயர்ப்பு மாத்திரமன்றித் தழுவல்களும் வெளிவந்துள்ளன. சிறப்பாக வடமொழி நூல்களைத் தழுவித் தமிழிலே எழுதும் மரபும் இக்காலத்திலே காணப்படுகின்றது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே தொடங்கிய மொழி பெயர்ப்புகள் பல இருபதாம் நூற்றாண்டின் முற் கூறிலே வெளிவந்தமை குறிப்பிடக் கூடியது.

**வசன நடை**

19ஆம் நூற்றாண்டிலே சிறப்புற வளர்ந்த துறைகளுள் வசனநடையும் விதந்து குறிப்பிட வேண்டியதொன்றாகும். ஆங்கிலக் கல்வியின் விருத்தி, அச்சியந்திரத்தின் பயன்பாடு, பத்திரிகைகளின் தோற்றம், பாடப்புத்தகங்களின் பெருக்கம், சமய இலக்கியச் சர்ச்சைகள் முதலானவற்றால் தமிழ் வசன நடை செழிப்புற்று வளர்ந்ததெனலாம்.

ஆறுமுக நாவலரின் பன்முகப் பணிகளிலே தமிழ் வசன நடைக்கு அவர் ஆற்றிய பணியை விதந்து பாராட்டாத அறிஞர்களே இல்லையெனலாம். இதனால் இவர் "வசன நடை கைவந்த வல்லவர் "எனப் போற்றப்பட்டார்.

19ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே தமிழ் உரைநடை நூல்கள் ஈழநாட்டிலே தோற்றம் பெற்றிருந்தன. ஒல்லாந்தர் காலப் பிற்பகுதியில் வாழ்ந்த மாதகல் மயில்வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவமாலையை உரை நடையிலேயே எழுதி னார்.

எனினும், 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னர்தான் தமிழிலே வீறார்ந்த ஒரு உரைநடை தோன்றுகின்றது. உரை நடையின் பல்வேறு வகைகளையும், வனப்புக்களையும் நாவலரினதும் அவருக்குப் பின் வந்தோரினதும் உரைநடைகளிலே பரக்கக் காணலாம்.

தாம் நோக்கிய பொருளுக்கேற்ப வாசகனின் நிலைக்குப் பொருந்த உரைநடை அமைய வேண்டுமென்பதில் 19 ஆம் நூற்றாண்டுத் தமிழறிஞர்கள் மிகுந்த கவனம் செலுத்தினர். பத்திரிகை நடை, பாடப்புத்தக நடை , கட்டுரை நடை, கண்டன நடை, ஆக்க இலக்கிய நடை என்றெல்லாம் வெவ்வேறு விதமான நடைகளை இக்காலத்து ஈழத்து அறிஞர்கள்கையாண்டனர். ஆறுமுகநாவலரின் சி.வை. தாமோதரம்பிள்ளை, கறள் விசுவநாதப்பிள்ளை,நா.கதிரைவேற்பிள்ளை, ஆர்னோல்ட்சதாசிவம் பிள்ளை முதலானோர் தமிழ் உரைநடை வளத்தையும் வலுவையும் நன்கு புலப்படுத்தினர்.

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

உரைநடையின் பல்பரிமாணச் செல்நெறியை இக்காலப் பகுதியிலே தெளிவாகக் காண முடிகின்றது. குறிப்பாக இக்காலத்தில் எழுந்த கண்டனங்களிலே வீறாந்த உரை நடை ஒன்று கையாளப்பட்டிருப்பதைச் சான்றாகச் சுட்டிக்காட்டலாம். (தொடரும்)

# கொழும்பு இந்துக்கல்லூரி

## க.பொ.த. உயர்தர முன்னோடிப் பரீட்சை

Pilot Examination

ஆனி 2008
June 2008

தமிழ்மொழியும் இலக்கியமும் - I

3 மணித்தியாலங்கள்
3 Hours

கவனிக்க:- * பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் 4 வினாக்களுக்குமாக எல்லாமாக 6 வினாக்களுக்கு விடை எழுதுக.
* மேலதிக வினாக்களுக்கு விடையெழுதலாகாது. அவ்வாறு எழுதும் சந்தர்ப்பத்தில் அவற்றுக்குப் புள்ளிகள் வழங்காது பரீட்சகரினால் வெட்டி விடப்படும்.
* தெளிவான எழுத்துக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

(1) பின்வரும் செய்யுட் பகுதிகளுள் எவையேனும் மூன்றினைத் தெரிவு செய்து
அ) அவற்றின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
ஆ) தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள பகுதிகளின் சிறப்பை விளக்குக.

அ) ஈங்கே வருவாளிவள் யார்கொ லாங்கேயோர்
வல்லவன் தைஇய பாவைகொல் நல்லார்
உறுப்பெலாங் கொண்டியற்றி யாள்கொல் வெறுப்பினால்
வேற்றுருவங் கொண்டதோர் கூற்றங் கொல்லாண்டார்
குடிதிவளைக் காவார் விடுதல் கொடியியற்
கல்கலைச் சில்பூங் கலிங்கத்த ளீங்கிதோர்
நல்கூர்ந்தார் செல்வமகள்

ஆ) வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று

அரம் போலும் கூர்மையரேனும்
மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்

நலத்தின் கண்நாரின்மை தோன்றி னவைக்
குலத்தின்க ணையப்படும்

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று

இ) உண்டுகொ லுயிரென னொடுக்கினானுருக்
கண்டன னின்றனன் கண்ணன் கண்ணெனும்
புண்டரீகம் பொழிபுனலவன்சடா
மண்டல நிறைந்து போய் வழிந்து சோரவே

அயாவுயிர்த் தருகண்ணீரருவி மார்பிடை
யுயாவுறத் திருவுள்ள முருகப் புல்லினா
னியாயமத்தனைக்கும் மோர் நிலையமாயினான்
றயாமுத லறத்தினைத் தழிஇய தென்னவே

ஈ) -புற்ரவிற் சீறிப்பு டைவளைந்து புல்லியர்தாம்
துற்றி விளைத்த கொடுந் துன்பந்த னியுழந்து
முற்றுங்கி ரகணத்தின் மூழ்குதி னகரன் போல்
செற்றமிலாத் தேவமைந்தன் தேசிழந்து தேம்பினார்

செவ்வங்கி யைக்களைந்து தேவர்பிரான் முன்றரித்த
அவ்வங்கியைத் தரித்தே யாகடியம் பலபேசித்
தெவ்வர் குழுமிச்சி லுவைதனைச் சுமத்திக்
கல்வை நகர் கலுழக் கட்டிக் கொடுபோனார்

(3×8= 24 புள்ளிகள்)

(2) "அ" பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடைதருக.

அல்லது

"ஆ" பகுதியிலுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.

1) காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும்
தூணி லழகியதாய் - நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் - அந்தக்
காணி நிலத்திடையே - ஓர் மாளிகை
கட்டித் தர வேண்டும் - அங்கு
கேணியருகினிலே - தென்னைமரக்
கீற்று மிள நீரும்

2) பத்துப் பன்னிரண்டு - தென்னைமரம்
பக்கத்திலே வேணும் - நல்ல
முத்துச் சுடர் போலே - நிலாவொளி
முன்பு வர வேணும் - அந்தக்
கத்துங் குயிலோசை - சற்றே வந்து
காதிற் பட வேணும் - என்றன்
சித்த மகிழ்ந்திடவே - நன்றாயிளந்
தென்றல் வரவேணும்.

3) பாட்டுக் கலந்திடவே -அங்கே யொரு
பத்தினிப் பெண் வேணும்- எங்கள்
கூட்டுக் களியினிலே - கவிதைகள்
கொண்டு தர வேணும் - அந்தக்
காட்டு வெளியினிலே - அம்மா நின்றன்
காவ லுறவேணும் - என்றன்
பாட்டுத் திறத்தாலே - இவ்வையகத்தைப்
பாலித் திடவேணும்.

(i) பாரதி பராசக்தியிடம் வேண்டுவனவற்றை உமது நடையில் தொகுத்துக்கூறுக.
(ii) பாரதியின் அழகுணர்ச்சி இப்பாடலில் வெளிப்படுமாற்றை தெளிவு படுத்துக.
(iii) கவிதையின் நோக்கம் பற்றிய பாரதியின் கருத்தை விளக்குக.
(iv) காணி என்ற சொல் இப்பாடலில் எப்பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை தெளிவுபடுத்துக.

அல்லது

ஆ) இவ்வகைப்பட்ட பெருஞ்சிறப்பினதாகிய அந்நூலானது பத்தியரூபமாய் இருத்தலால், நிகண்டு கற்று இலக்கியவாராய்ச்சி செய்து இலக்கணநூல்களிலே பயின்ற வித்துவான்களுக்கேயன்றி மற்றவர்களுக்குச் சிறிதும் பயன்படாமையாலும், அவ்வித்துவான்களுக்கும் நோய் கவலை முதலிய ஏதுக்களால் விவேகங்கியாராக் காலத்துப் பயன்படாமையாலும், நிறைந்த கல்வியுடைய வித்துவான்களும் குறைந்த கல்வியுடையபிறரும் ஆகிய யாவரும் எக்காலத்தும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும், கல்வியில்லாத ஆடவர்களும் பெண்களும் பிறரைக் கொண்டு வாசிப்பித்து உணரும் பொருட்டும். நாயினுங் கடையனாகிய என்னை ஒரு பொருளெனக் கருதி ஆட்கொண்டருளிய கிருபாசமுத்திரமாகிய ஸ்ரீமத் குரு மூர்த்தியுடைய திருவடிகளை சிந்தித்து துதித்து வணங்கி அவரது திருவருளினாலே அதனைப் பெரும்பான்மையும் இயற் சொற்களும் சிறுபான்மை அவசியமாகிய திரிசொற்கள் வடசொற்களும் பிரயோகிக்கப்படுங் கத்திய ரூபமாகச் செய்து, வாசிப்பவர்களுக்கு எளிதிலே பொருள் விளங்கும்படி பெரும்பான்மையும் சந்தி விகாரங்களின்றி அச்சிற்பதிப்பித்தேன்.

(ஆறுமுகநாவலர்: திருத்தொண்டர் பெரியபுராண வசன முகவுரை)

(i) பத்தியரூபம், கத்தியரூபம், அவசியகம், பிரயோகம் ஆகிய வடசொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைத் தருக.
(ii) பத்தியரூபமாய் இருந்த திருத்தொண்டர் பெரியபுராணத்தை கத்திய ரூபமாய் மாற்றி எழுதியமைக்கு ஆறுமுகநாவலர் கூறும் 4 காரணங்களையும் உமது நடையில் குறிப்பிடுக.
(iii) இப்பந்தியின் அடிப்படையில் நவீன உரைநடையின் பிரதான பண்புகள் என ஆறுமுகநாவலர் கருதுவனவற்றைக் குறிப்பிடுக.
(iv) இப்பந்தியில் கையாளப்படும் உரைநடையை ஆதாரமாகக் கொண்டு தற்கால உரைநடையிலிருந்து 19ஆம் நூற்றாண்டு உரைநடை எவ்வகையில் வேறுபடுகின்றது என்பதை விளக்குக.

(4×4 = 16 புள்ளிகள்)

### பகுதி II

எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(3) "பெருமை" என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவனவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
அ) பெரியார் இயல்புகள்
ஆ) சிறியார் இயல்புகள்
இ) பெருமையும் சிறுமையும் இனங்காணப்படுமாறு

(4) திருவடி சூட்டுபடலத்தில் மறைந்த தந்தைக்கு இராமன் நீர்க்கடன் செய்து மீண்டது முதல் வசிட்டரின் வேண்டுகோளை அவன் மறுத்தது வரையுள்ள பகுதியில்
அ) பரதனின் நெடுந்துயர்
ஆ) தசரதன் இறந்த செய்தி கேட்டு சீதை அடைந்த துன்பம்
இ) அரசினைப் பரதனே ஏற்க வேண்டும் என்பதற்கு இராமன் காட்டிய நியாயங்கள் என்பன சித்திரிக்கப்பட்டிருக்குமாற்றினை விளக்குக.

(5) அ) முகம்மது நபி (ஸல்) அவர்களின் புகழ்
ஆ) கருபத்துல்லாவின் சிறப்புக்கள்
இ) உவமை அணியைக் கையாள்வதில் வண்ணக் களஞ்சியப் புலவர் பெற்றிருந்த ஆற்றல்.
ஆகியவை இராஜநாயகம் குறுபான் கொடுத்த படலத்திற் புலப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

(6) மகாகவி பாரதியாரின் "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி" எனத் தொடங்கும் கவிதையிலும் "வாழ்க நீ எம்மான்" எனத் தொடங்கும் கவிதையிலும் பாரதியாரின்
அ) நாட்டுப்பற்றுக்கான காரணங்களும்
ஆ) மகாத்மாகாந்தி மேல் அவர் கொண்ட மதிப்பிற்கான காரணங்களும் விளங்குமாற்றினைத் தெளிபடுத்துக.

(7) "நாகம்மாள்" என்னும் நாவலில் இடம்பெறும் பாத்திரங்களான
அ) செல்லக்காள்
ஆ) காளியம்மாள்
இ) மணியக்காரரின் பெரியப்பா
ஆகியோரின் குணப்பண்புகளைச் சுருக்கமாகக் காட்டி அப்பாத்திரங்கள் கதைவளர்ச்சிக்கு உதவுமாற்றினை பரிசீலிக்க.

(8) பின்வருவனவற்றுள் எவையேனும் 3 வினாக்களுக்கு விடை எழுதுக.
அ) தேஎந் தீந்தொடைச் சீறியாழ்ப்பாண எனத் தொடங்கும் புறநானூற்று செய்யுளில் கிள்ளிவளவனது நாட்டுவளமும் கொடைச்சிறப்பும்.
ஆ) குடிமை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துக்கள்
இ) அம்பிகையிடத்தும் சிவனிடத்தும் குமரகுருபரர் கொண்ட பக்தி மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் வெளிப்படும் விதம்.
ஈ) சோமசுந்தரப்புலவர் பாடல்களில் அவர் ஆறுமுகநாவலரிடத்துக் கொண்ட பற்றும் அப்பற்றுக்கான காரணங்களும்.
உ) சிலப்பதிகாரத்தில் கோப்பெருந்தேவி கண்ட கனவு

(4×15 = 60 புள்ளிகள்)

(தொடரும்)

## லஞ்சம் பெற்ற அரச ஊழியருக்கு சீனாவில் மரண தண்டனை

சீனாவின் போக்குவரத்து துறையின் முன்னாள் அதிகாரி ஒருவருக்கு 30இலட்சம் டொலர்கள் அளவுக்கு லஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் வசித்து வந்த இந்த அதிகாரியின் வீட்டுக்கு மேலே குடியிருப்பவரின் கழிப்பறையில் இருந்து நீர் கசிந்ததால் இந்த அதிகாரியின் வீட்டுக்குள் பழுதுபார்க்கும் ஊழியர்களும் பொலிஸாரும் நுழைய நேர்ந்தது.

அந்த அதிகாரியின் குளியல் அறையில் 8 பெட்டிகள் நிறைய கத்தை கத்தையாய் பணம் நனைந்த நிலையில் இருந்தது கண்டுபிடிக் கப்பட்டது.

வீதி அமைப்பதற்கான கட்டுமான ஒப்பந்தங்களை லஞ்சம் பெற்றுக்கொண்டு யன்தபின் என்ற இந்த அதிகாரி வழங்கியிருந்தார் என்பதைப் புலன்விசாரணை அதிகாரிகள் பின்னர் கண்டுபிடித்தனர். (அ-6)

## குவைத்தில் வேலைநிறுத்தம் செய்த இருநூறு பங்களாதேஷ் தொழிலாளர்கள் வெளியேற்றம்?

குவைத்தில் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்ட 200இற்கும் மேற்பட்ட பங்களாதேஷ் தொழிலாளர்கள் அவர்களது தாய்நாட்டிற்குத் திருப்பியனுப்பப்பட் டுள்ளனர். குவைத்தில் சுத்திகரி ப்பாளர்களாக பணிபுரியும் ஆயிரக் கணக்கான பங்களாதேஷ் நாட்டவர்கள் இந்த வார முற்பகுதியில் வேலை நிறுத்த போராட்டமொன்றை ஆரம்பித்தனர். இதனைத் தொடர்ந்து போராட்டம் வன்முறையில் முடிவடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் எனக் கருதப்படும் ஊழியர்களை இந்த வார முற்பகுதியிலிருந்து கட்டம் கட்டமாக அவர்களது தாய் நாட் டுக் குவைத் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

சம்பள உயர்வு மற்றும் ஊழியர்களின் வாழ்க்கைத் தரம் தொடர்பில் குவைத் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்து கடந்த திங்கட்கிழமை குவைத் நகரத்தில் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வீடுகளுக்கு கல்லெறிந்து சேதப் படுத்தியதுடன் வீதியில் நின்ற கார்களையும் சேதப் படுத்தியுள்ளனர். இதே வேளை தொழிலாளர்களை மோசமாக நடாத்திய தொழில்வழங்குனர்களே இப்போராட்டத்துக்குப் பொறுப்பு என குவைத் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (அ-6)

# றோயல் கல்லூரி, கொழும்பு -07
# Royal College, Colombo - 07

முன்னோடிப் பரீட்சை
Pilot Examination

ஆனி 2008
June 2008

தரம் 13
Grade 13

கணக்கீடு - II (பகுதி II)
Accounting -II (Part II)

2 மணித்தியாலங்கள்
Two Hours

(06) பணிப்பாளர் சபையின் முன்மொழிவுகள் வருமாறு,
-பொது ஒதுக்கத்திற்கு ரூபா 300000 மாற்றுதல்
-சாதாரண பங்குதாரர் கொண்டிருக்கும் ஒவ்வொரு 10 பங்கிற்கும் 01 பங்கினை உபகாரப் பங்காக வழங்குதல்.

**தேவைப்படுவது,**
பிரசுரிப்பதற்கேற்ற வகையில்
1) 2007.03.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்று
2) 2007.03.31 இல் முடிவுற்ற தினத்தில் உள்ளபடியான ஐந்தொகை
3) ஆதனம்,பொறி, உபகரணங்களின் அசைவுக் கூற்று
4) உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று

### வினா இல.02

அ)சன்னி லிமிடெட் 200000 சாதாரண பங்குகளை பொது வழங்கீடு செய்வதற்கு விண்ணப்பங்களை கோரியிருந்தது.பங்கொன்றின் பெறுமதி ரூபா 20 பணம் பின்வருமாறு சேகரிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூபா | 5.00 |
| ஒதுக்கலின் போது | ரூபா | 10.00 |
| அழைப்பு (முதலும் இறுதியும்) | ரூபா | 5.00 |
| | | 20.00 |

2007 ஏப்ரல் 15 இல் 300000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டன.
1) 50000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.
2) 50000 பங்குகளுக்குரிய விண்ணப்பங்கள் தொடர்பாக முழுமையாக பங்குகள் பெறப்பட்டன.
3) எஞ்சிய பங்குகளுக்குரிய விண்ணப்பங்கள் தொடர்பாக விகிதசம அடிப்படையில் பங்குகள் ஒதுக்கப்பட்டன.

மிகையான விண்ணப்பங்கள் ஒதுக்கல் நிலுவைக்கு பயன்படுத்தப்பட்டன. ஏனையோரிடமிருந்து ஒதுக்கல் பணம் சேகரிக்கையில் 6000 பங்குகள் விகிதசம அடிப்படையில் ஒதுக்கப்பெற்ற பங்குதாரர் ஒதுக்கல் பணத்தை செலுத்தவில்லை.

முதலும் இறுதியுமான அழைப்பிலும் இவை நிலுவையாக காணப் பட்டமையால் பங்குடமையில் 2007 ஜூலை 31 பறிமுதல் செய்யப்பட்டது.

இப்பங்குகள் 2007 செப்டெம்பர் 03 இல் ரூபா 21 இற்கு மீளவழங்கப்பட்டது.

**தேவைப்படுவது,**
1) பொருத்தமான பேரேட்டுக் கணக்குகளை தயாரிக்கவும்.

ஆ) ஜோன்சன் கம்பனியின் ஏடுகளில் பிரித்தெடுக்கப்பட்ட நிலுவைகள் வருமாறு, ரூபா "000" களில்

| | | |
|---|---|---|
| விற்பனை (கடன் விற்பனை 75%) | | 2400 |
| விற்பனைக் கிரயம் | | 1800 |
| 2007.ஜனவரி 01 இல் | -வியாபார இருப்பு | 250 |
| | -வியாபாரக் கடன்படுனர் | 325 |
| | -வியாபாரக் கடன்கொடுனர் | 310 |
| 2007. டிசெம்பர் 31 இல் | -வியாபார இருப்பு | 350 |
| | -வியாபாரக் கடன்படுனர் | 475 |
| | -வியாபாரக் கடன்கொடுனர் | 450 |

பின்வருவனவற்றைக் கணிக்க.
1) மொத்த இலாப வீதம்
2) கடன்கொடுனர் புரள்வு விகிதம்
3) கையிருப்பு புரள்வு விகிதம்
4) கடன்படுனர் புரள்வு விகிதம்

### வினா இல. 03.

சில்வெஸ்டர் கம்பனி லிமிடெட்டின் ஐந்தொகைகளும் மேலதிகக் குறிப்புகளும் வருமாறு,

சில்வெஸ்டர் கம்பனி லிமிடெட்டின் 2008 மார்ச் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை.

| சொத்துக்கள் | 2006/07 | 2007/08 |
|---|---|---|
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | |
| உருவச் சொத்துக்கள் | 1400 | 1325 |
| முதலீடுகள் | 230 | 180 |
| | 1630 | 1505 |
| **நடப்புச் சொத்துக்கள்** | | |
| கையிருப்பு | 130 | 145 |
| வியபார கடன்படுனர் | 400 | 315 |
| காசுமீதி | 140 | 235 |
| | 670 | 695 |
| **நடைமுறைப் பரிப்புகள்** | | |
| வியாபாரக் கடன்படுனர் | 125 | 118 |
| வங்கி மேலதிகப்பற்று | 105 | 175 |
| வருமானவரி ஏற்பாடு | 245 | 110 |
| பிரேரித்த பங்கிலாபம் | 70 | 100 |
| | 545 | 503 |
| தொழிற்படு மூலதனம் | 125 | 192 |
| மொத்த சொத்துக்கள் (நடைமுறைப் பரிப்பு கழித்தபின்) | 1755 | 1697 |

| | | |
|---|---|---|
| **உரிமையாண்மை** | | |
| பங்கு மூலதனமும், ஒதுக்கங்களும் | | |
| பங்குமூலதனம் | 1200 | 1300 |
| பொது ஒதுக்கீடு | 300 | 350 |
| பகிரப்படாத இலாபம் | 255 | 47 |
| | 1755 | 1697 |

**மேலதிக தகவல்கள்**

01) கணக்காண்டில்
-செலுத்தவட்டிச் செலவு ரூபா 75000
-செலுத்திய வருமானவரி ரூபா 300000
-செலுத்திய பங்கிலாபம் ரூபா 125000

02) பின்வரும் தரவுகள் உருவச் சொத்துக்களுடன் தொடர்புடையவை.

| | | 2006/07 | 2007/08 |
|---|---|---|---|
| கிரயம் | ரூபா | 1800000 | 2000000 |
| திரண்ட தேய்வு | ரூபா | (400000) | (675000) |
| தேறிய புத்தகப் பெறுமதி | ரூபா | 1400000 | 1325000 |

பொறி ஒன்றின் கிரயம் ரூபா 300000 ஆகும். இதன் புத்தகப் பெறுமதி ரூபா 220000 ஆகும்.ரூபா 206000இற்கு விற்கப்பட்டது.

03) முதலீடுகளின் விற்பனையால் பெற்ற காசு ரூபா 80000 ஆகும்.

**தேவைப்படுவது,**
1) 2008 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று (நேரில் முறையில்) தயாரிக்க.

### வினா இல. 04

அ) மூலப்பொருள் MZ -6 தொடர்பாக பின்வரும் தரவுகள் பெறப்பட்டன.

1)முதன்மைக்காலம் - ஆகக்கூடியது 04 மாதங்கள்
- ஆகக்குறைந்தது 02 மாதங்கள்
-சராசரி 03 மாதங்கள்

பாதிடப்பட்ட நுகர்வு - ஆகக்கூடியது -300அலகுகள் (மாதமொன்றுக்கு)
-ஆகக்குறைந்தது -50 அலகுகள் (மாதமொன்றுக்கு)
-சராசரி- 150 அலகுகள்(மாதமொன்றுக்கு)
-வருடாந்தம் -1800 அலகுகள்

களஞ்சியப்படுத்தல் கிரயம் இருப்பின் பெறுமதியில் 25% சதவீதம் கட்டளையொன்றை பிறப்பிப்பதற்கான கிரயம் ரூபா 200 ஆகும். மூலப்பொருளொன்றின் விலை ரூபா 32 ஆகும்.

**தேவைப்படுவது,**
1) மறுகட்டளை கணியம்
2) மறுகட்டளை மட்டம்
3) இழிவு மட்டம்
4) சராசரி இருப்பு மட்டம்

ஆ) கீழ்வரும் தகவல்களை கருத்திற்கொண்டு ஒவ்வொரு ஊழியருக்குமான வருமானத்தை கீழ்வரும் ஒவ்வொரு முறையிலும் கணிக்க.
1) உற்பத்தி அலகு முறை (உத்தரவாத நேரக்கூலியுடன்)
2) சாதாரண நேரக்கூலி
3) மிகையூதியக் கூலி (சேமிக்கப்படும் மணித்தியாலங்களுக்கு 50% சதவீத மிகையூதியக்கூலி)

| | ஊழியர் பெயர்கள் | | | |
|---|---|---|---|---|
| | சரத் | அகத் | ராஜ் | |
| அனுமதித்த நேரம் (100 அலகுகளுக்கு) | 23 | 32 | 38 | -மணித்தியாலங்கள் |
| அலகொன்றுக்கான கூலி ரூபா | 10/50 | 21/00 | 20/50 | |
| மணித்தியாலத்திற்கான கூலி ரூபா | 60 | 75 | 60 | |
| எடுக்கப்பட்ட நேரம்-மணித்தியாலங்களில் | 40 | 42 | 50 | |
| உற்பத்தி செய்த அலகுகள் | 200 | 150 | 150 | |

### வினா இல.05

சக்ஸஸ் கம்பனி லிமிடெட் 03 உற்பத்தி திணைக்களங்களையும்(A,B&C) யும், Dஎன்ற சேவை திணைக்களத்தையும் கொண்டது.

2008 டிசெம்பர் 31 இற்கு மதிப்பிடப்பட்ட கிரயங்கள் வருமாறு, ரூபா (000) களில்

| | | | |
|---|---|---|---|
| நேரில் மூலப்பொருட்கள் -உற்பத்தி திணைக்களம் ரூபா | | A | 1875 |
| | | B | 861 |
| | | C | 914 |
| நேர்க்கூலிகள் -உற்பத்தித் திணைக்களம் | | A | 3000 |
| | | B | 2000 |
| | | C | 1500 |
| | சேவை திணைக்களம் | D | 1000 |
| | மேற்பார்வை செலவு | | 1500 |
| ஏனைய மேந்தலைகள் - | ஆலை வாடகை | | 6000 |
| | ஊழியர் நலன்புரி செலவுகளும் | | 3750 |
| | பொறிவிருட்சத் தேய்வு | | 3000 |
| | எரிபொருளும் சக்தியும் | | 600 |

சேவைதிணைக்களம் Dயின் மொத்த மேந்தலைகிரயம் உற்பபத்திப் பிரிவுகளுக்கிடையில் பின்வருமாறு மீளப்பகிரப்படல் வேண்டும்.
திணைக்களம் A - 50%, திணைக்களம் B - 30% திணைக்களம் C -20%
பாதீடு செய்யப்பட்ட வெளியீடுகள் வருமாறு
A-திணைக்களம் 100000 அலகுகள்
B-திணைக்களம் 200000 இயந்திர மணித்தியாலங்கள்
C-திணைக்களம் 20000 ஊழிய மணித்தியாலங்கள்

பின்வரும் மேலதிக தகவல்கள் தரப்பட்டன

| திணைக்களங்கள் | A | B | C | D |
|---|---|---|---|---|
| இடப்பரப்பளவு -சதுரஅடி | 1500 | 1100 | 900 | 500 |
| பொறிவிருட்சம் -கொள்விலை ரூபா(000) | 12000 | 10000 | 5000 | 3000 |
| குதிரைச் சக்தியுடன் இயந்திரமணித்தியாலங்கள் | 800 | 1200 | 600 | 400 |

**தேவைப்படுவது,**
1) ஒவ்வொரு உற்பத்தி திணைக்களத்திற்கும் பொருத்தமான மேந்தலை உள்ளடக்கல் விகிதங்களை கணிக்குக.
(சகல பகிர்வுச் செய்முறைகளும் கட்டாயம் காட்டப்படல் வேண்டும்)

### வினா இல.06

அ) ஜெயசிறி லிமிடெட் மரத்தினால் உருவான கைவினைப் பெட்டிகளை உற்பத்தி செய்வதற்கு 2008 ஒக்டோபர் மாதத்திற்கு மதிப்பிட்ட தரவுகள் வருமாறு,

| | | | |
|---|---|---|---|
| நேர் மூலப்பொருள் செலவு | | ரூபா | 100000 |
| நேர் கூலிச் செலவு | | | 150000 |
| ஆலை மேந்தலை கிரயங்கள் | -மாறும் | | 50000 |
| | -நிலையானது | | 7000 |
| விற்பனை பங்கீட்டு செலவினங்கள் | -மாறும் | | 40000 |
| | -நிலையானது | | 9000 |
| நிர்வாக மேந்தலை செலவுகள் | -நிலையானது | | 32000 |

2008 -ஒக்டோபர் மாதத்திற்கு மதிப்பிடப்பட்ட வெளியீடுகள் 8000 அலகுகள்
மதிப்பிடப்பட்ட விற்பனை விலை 50/- அலகொன்று

**தேவைப்படுவது:-** பின்வருவனவற்றை கணிக்குக.
1) இலாபநட்டமற்ற புள்ளியில் -அலகுகள்
- விற்பனை பெறுமானம்
2) பாதுகாப்பு எல்லை -அலகுகளிலும்,ரூபாயிலும்
3) தற்போதைய தேறிய இலாபத்தை கணிக்கும் கூற்று
4) ரூபா 100000 இனை நிகர இலாபமாக உழைக்க உற்பத்தி செய்து விற்க வேண்டிய அலகுகள்.

ஆ) பிரசன்னா லிமிடெட் புதிதாக சந்தைப்படுத்தவுள்ள M அல்லது Q பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு புதிய இயந்திரமொன்றை ரூபா 1000000 பெறுமதியில் கொள்வனவு செய்தல் வேண்டும். Mஅல்லதுQ பண்டங்களின் உற்பத்தி மூலம் எதிர்பார்க்கும் வருமானங்களும் 10% சத கழிவீட்டு காரணியில் கழிவிடப்பட்ட வீதங்களும் ஆண்டுகளுக்கு பின்வருமாறு,

| ஆண்டு | 10% சதவீத கழிவு காரணியில் கழிவிடப்பட்ட சதவீதம் | பண்டம் "M"மூலம் தேறிய வருமானம் | பண்டம் "Q"மூலம் தேறிய வருமானம் |
|---|---|---|---|
| 1 | 0.91 | ரூபா 500000 | 200000 |
| 2 | 0.83 | ரூபா 300000 | 250000 |
| 3 | 0.75 | ரூபா 300000 | 300000 |
| 4 | 0.68 | ரூபா 150000 | 350000 |
| 5 | 0.63 | ரூபா 100000 | 200000 |

மூலதன கிரய வீதம் 10% சதவீதமாகும்.

**தேவைப்படுவது,**
1) Mஅல்லது Q பண்ட உற்பத்திகளில் ஈடுபடுத்துவதற்கான இயந்திரத்தை முதலீட்டு திரும்பல் காலத்தைக் கணிக்க.
2) ஒவ்வொரு பண்ட உற்பத்திகளின் தேறிய நிகழ்கால பெறுமதியைக் கணிக்க.

(முற்றும்)

# மனித நேயங்களுக்கு அப்பால் இனவாதத்தின் கரங்கள் மேலோங்கிக் காணப்படுகின்றன

## அமைச்சர் றிஷாட் பதியுதீன் கவலை

(கொழும்பு)

வடமேல் மாகாணத்தில் காணப்படும் தொண்டர் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு எவ்வித பாதிப்பும் வராமலும் இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வித் தரத்தை கவனத்திற் கொண்டும் வட மாகாணத்தின் கீழ் கொடுப்பனவுகளை வழங்கும் வகையில் ஆசிரியர்களை நியமித்தபோது வடமேல் மாகாண சபை இந்த ஆசிரியர்களின் விடயங்களில் கடும் போக்குகளை காட்டி வருவதாக குற்றஞ்சாட்டியுள்ள அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சருமான றிஷாட் பதியுதீன் மனித நேயங்களுக்கு அப்பால் இனவாத்தின் கரங்கள் மேலோங்கிக் காணப்படுவதாகவும் கூறினார்.

புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் கல்வி வலயத்தில் அமைந்துள்ள நஸ்ரியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் அமைச்சரின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட பாடசாலைக் கட்டடத் திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது. இங்கு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

பாடசாலை அதிபர் எம்.டி.எம்.தாஹிர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மேலும் அமைச்சர் றிஷாட் பதியுதீன் பேசுகையில் கூறியதாவது,

வட புலத்தில் இருந்து முஸ்லிம்கள் விருப்பத்துடன் வந்தவர்கள் அல்ல. குறுகிய கால அவகாசத்துக்குள் வெளியேற்றப்பட்டவர்கள் இந்த வெளியேற்றத்திற்கான வயது 18 ஆகும். எமது மக்கள் பல இன்னல்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக கல்விசார் விடயங்களில் இடம்பெயர்ந்த சமூகத்தின் பாராளுமன்ற பிரதிநிதி என்ற வகையில் அம்மக்களின் மீட்சிக்காக என்னை முழுமையாக அர்ப்பணிப்புச் செய்து செயலாற்றி வருகின்றேன்.

அதேபோல் நாம் இடம்பெயர்ந்து வந்தபோது எமக்கு ஆதரவு வழங்கி இன்றும் அரவணைத்து கொண்டுள்ள புத்தளம் மாவட்ட சகல சமூகங்களுக்கும் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளேன்.

கல்வித் துறையைப் பார்க்கின்றபோது தமிழ் பேசும் பாடசாலைகள் பெரும் சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றது. இந்த பாடசாலையில் வளப் பற்றாக்குறையும் போதுமான ஆசிரியர்கள் இல்லாமையும் மாணவ சமூகத்துக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகவுள்ளது. ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுகின்றபோது சில அரசியல்வாதிகள் தமது பிரதேசத்திற்கு முன்னுரிமையளித்து அவ்வாசிரியர்களை பெற்றுக்கொள்கின்றனர். இதனால் சிலாபம் சவராண, கொட்டாரமுல்ல போன்ற பாடசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

மாணவ சமூகத்தின் கல்வித்தரம் குறித்து அதற்கான உதவிகளை செய்யவேண்டும் என நாம் வடமேல் மாகாண சபையுடன் பேச முயற்சிக்கின்றபோது நாம் எதிர்க்கட்சி பிர திநிதி போன்று பார்க்கப்படுகின்ற நிலை தற்போதுள்ளது. கல்விசார் விடயங்களில் அகதிகள் என்று பிரித்தும் நோக்குகின்றனர்.

ஆசிரிய உதவியாளர்கள் நியமனம் சம்பந்தமாக அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் வட மாகாணத்தின் மேற்பார்வையில் நியமனங்கள் வழங்கப்பட்டன. இவர்களை இடம்பெயர்ந்த மாணவர்கள் கல்வி பயிலும் பாடசலைகளில் நியமிக்க உரிய அனுமதியுடன் வடமேல் மாகாண சபை பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன. வடமேல் மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பின்னர் இவர்கள் குறித்து பரிசீலிக்கப்படும் என்று கூறப்பட்டபோதும் அது தொடர்பில் வடமேல் மாகாணம் எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

வடக்கிலிருந்து புலிகளால் நாம் வெளியேற்றப்பட்ட வேதனையை விட பெரும்பான்மையினரின் கடும் இனவாதம் இம் மாகாணத்தில் உச்ச கட்டத்தில் காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணததை அரசு தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததன் பின்னர் இரண்டு இலட்சம் மக்கள் அவர்களது சொந்த பிரதே சங்களில் மீள் குடியமர்ததப்பட்டனர். இத் துறைக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் அப் பகுதிக்கு அடிக்கடி சென்று நிலைமைகளைக் கவனித்தும் வருகின்றேன். இனவாதம். மதவாதம். பிரதேசவாதம் என்னிடத்தில் இல்லை என்றார். (அ-6)

## மகா ஓயாவில் இளைஞனின் சடலம்

(கொழும்பு)

அடையாளம் தெரியாத இளைஞரின் சடலம் ஒன்று மகா ஓயா ஆற்றில் வீசப்பட்டுள்ளது.

கடத்திச்செல்லப்பட்ட ஒருவரின் சடலமாக இது இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. நீர்கொழும்பு கட்டான என்ற இடத்தில் உள்ள மகா ஓயா ஆற்றில் கடந்த வியாழக்கிழமை வீசப்பட்டுள்ளது.

30 வயது மதிக்கத்தக்க இளைஞரின் சடலமாக இருக்கலாம் என இது அனுமானிக்கப்படுகிறது. இந்த இளைஞர் வேறு ஒரு இடத்தில் கொலை செய்யப்பட்டு சடலம் எடுத்து வரப்பட்டு கட்டாணையில் வீசப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. கொழும்பிலும் ஏனைய பிரதேசங்களிலும் பலர் கடத்திச் செல்லப்பட்டுள்ள நிலையிலேயே இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. (அ-5)

## ஜனாதிபதியின் பொது மன்னிப்பு இ.தொ.கா. ஏற்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டதாக அதன் உப தலைவர் பீ.இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற விசேட பேச்சு வார்த்தையின் போது இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு அதிக நேரம் கட்சித்தலைமையுடன் ஜனாதிபதி நட்புறவுடன் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# காப்பீட்டுத்துறையில் காத்திருக்கும் பணி வாய்ப்புகள்

எதிர்பாராத காரணங்களால் தனி நபருக்கோ அல்லது பொருட்களுக்கோ அழிவு ஏற்படும்போது அந்த இழப்புக்கு ஈடான பணமதிப்பை தருவதையே காப்பீடு (இன்சூரன்ஸ்) என்கிறோம். ஒரு தனி நபருக்கோ நிறுவனத்துக்கோ ஏற்படும் இழப்பை காப்பீடு பெற்றுள்ள அனைவரும் பகிர்ந்து கொள்வது என்ற அடிப்படையில் காப்பீட்டுத் தொழில் இயங்குகிறது.




காப்பீட்டுத்துறையின் மூலமாக தனிநபர், தொழில் நிறுவனங்கள், சமூகம் போன்றவை பயன்பெறுவதோடு பலருக்கான வேலை வாய்ப்பு ஆதாரத்தையும் இத்துறை உருவாக்கு கிறது.

2000க்கு முன் வரை அரசுத் துறையிலேயே இருந்து வந்த இன்சூரன்ஸ் துறையில் தற்போது தனியார் நிறுவனங்களும் இயங்குகின்றன. இன்சூரன்ஸ் துறையானது லைப்இன்சூரன்ஸ் மற்றும் பொது இன்சூரன்ஸ் என இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. மனித உயிர் விபத்தினால் ஏற்படும் அங்கவீனம் போன்றவற்றை லைப்இன்சூரன்ஸ் நிறுவனங்களும் தீ, திருட்டு, கடல்வழி சரக்கு பரிமாற்றம் மற்றும் மோட்டார் இன்சூரன்ஸ் போன்றவற்றை பொது நிறுவனங்களும் நிர்வகிக்கின்றன. அனைத்து இன்சூரன்ஸ் நிறுவனங்களும் காப்புறுதிச் சபையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன.

ஆக்கவரி எனப்படும் பிரிவினர் இன்சூரன்ஸ் தொழிலை நடத்துவதற்கேற்ப பிரீமிய விகிதங்களை நிர்ணயிப்பது கூடுதல் பிரிமியத்தை தேவைக்கேற்ப பெறுவது புதிய புதிய இன்சூரன்ஸ் திட்டங்களை வடிவமைப்பது போன்ற பணிகளைச் செய்கிறார்கள். இன் சூரன்ஸ் தொடர்பான பணிகளில் இதுவே கௌரவமிக்கதாகக் கருதப்படுகிறது. அன்டர்ரைட் டர் எனப்படும் பிரிவினர் காப்பீடு செய்வதற் காக வரும் விண்ணப்பங்களை (புரோ போசல்) அலசி ஆராய்ந்து அந்த இன்சூரன்ஸை ஏற் றுக் கொள்ளலாமா? வேண்டாமா? எந்த விகி தத்தில் ஏற்றுக்கொள்வது போன்றவற்றை முடிவு செய்கிறார்கள். சில சமயம் ஏற்றுக் கொள்ளப்பட்ட இன்சூரன்ஸ், பிற இன்சூரன்ஸ் நிறுவனங்களில் ரீ இன்சூரன்ஸ் செய்வது குறித்தும் இவர்கள் முடிவு எடுக்கிறார்கள்.

பொலிஸிகளின் உரிமம் ஏற்பட்டால் அவற்றை கிளெய்ம்ஸ் (உரிமம்) பிரிவினர் காத்துக்கொள்கிறார்கள். இழப்பீன் அளவை மதிப்பிட ஆய்வாளர்கள் அசெஸர்கள் போன்ற பிரிவினரும் பணிக்குப் பயன்படுத்திக்கொள் ளப்படுகிறார்கள்.

இன்சூரன்ஸ் தொடர்பான அம்சங்களை மக்கள் மத்தியில் எடுத்துச்செல்லும் அடிப்படையான மற்றும் முக்கிய வேலையை இன்சூரன்ஸ் முகவர்கள் செய்கிறார்கள். குறிப்பிட்ட கூலத்தில், இவர்கள் பிரீமிய வருவாய் இலக்குகளை மையமாகக் கொண்டு மார்க்



கெட்டில் பணிகளை தரகு அடிப்படையில் செய்கிறார்கள்.

தற்போது இன்சூரன்ஸ் முகவர்களும் இத்துறையில் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப பொலிசிகளை தந்து வருகிறார்கள். தொழில் நிறுவனங்களின் தன்மைக்கேற்ப அறிந்து அந்த நிறுவனங்களை இன்சூரன்ஸ் எடுக்கத் தூண்டும் ரிஸ்க் மேலாளர்களும் அந்தந்த நிறுவனங்களிலேயே பணி யில் உள்ளனர்.

### துறைக்கான தன்மை என்ன?

நம்பகத்தன்மை, கணிதவியல், அறிவு, எழுதும் மற்றும் பேசும் திறன் மக்களுக்கு சேவை புரிவதில் ஈடுபாடு கொண்டவர்களே இத்துறைக்கு பொருத்தமானவர்கள்.

தற்போது இந்தியாவில் பல பல்கலைக் கழகங்கள் இன்சூரன்ஸ் பிரிவிலேயே எம். பி.ஏ படிப்புகளை தரத் தொடங்கியுள்ளன.

பணிவாய்ப்புகள் இத்துறையில் அண் டர்ரைட்டிங் ,உரிமம், பிசினஸ் அனலிஸ்ட், எக்ஸிகியூட்டிவ் டிரெய்னி, மனேஜ்மெண்ட் டிரெய்னி ,இன்சூரன்ஸ் அனலிஸ்ட். சேல்ஸ் மனேஜர், இன்சூரன்ஸ் கன்சல்ட்ன்ட். இன் சூரன்ஸ் அட் வைசர் ஆய்வாளர், அசெஸர் போன்ற பல்வேறு பணி வாய்ப்புகள் உள்ளன.

# மொபைல் பில்லை அதிகரிக்கவைக்கும் ட்ரோஜன் வைரஸ்

ஒரு சில நேரங்களில் திடீரென நீங்கள் எதிர்பார்த்ததை காட்டிலும் மொபைல் பில் பல மடங்கு அதிகமாக இருக்கிறதா? நாம் இல்லாத போது மொபைல் போனைப் பயன்படுத்தி வெளிநாட்டு எண்களுக்கெல்லாம் யார் பேசினார்கள் என்று சந்தேகம் ஏற்படும்.

ஆனால் பிறரை சந்தேகிக்க வேண் டிய அவசியமில்லை. ஆம் உங்கள் போனுக்குள் தான் எதிரி உட்கார்ந்திருக்கிறான். மொபைல் போனில் நுழையும் ட்ரோஜன் வைரஸ் ஒன்று இந்த வேலையைச் செய்திடும் வகையில் எழுதப்பட்டு உங்களுக்கு வரும் மெயில்களுடன் அனுப்படுகிறது.


பிரிட்டன் சந்தையில் ஈடுபட்டு அதிகப் பணம் சம்பாதிக்க ஆசையா? என்று உண்மையான காரணத்தை உள்ளடக்கியதாக இந்த மெசெஜ் வருகிறது. இதனை திறந்து இதன் தூண்டிலில் சிக்கினால் உங்கள் கணக்கில் உள்ள பணம் மட்டுமின்றி பெர்சனல் தகவல்கள் அனைத்தும் போய்விடும்.

அதே நேரத்தில் இந்தச் செய்தியில் உள்ள வைரஸ் அடங்கிய குறியீட்டு வரிகள் முகவரி புத்தகத்தில் உள்ள முகவரிகளை கைப்பற்றுகிறது. பல சர்வதேச எண்களுக்கு தானாக டயல் செய்கிறது. ஜாதகக் குறிப்பு, மனநிலை பாதிப்பிற்கான சேவை போன் வழி செக்ஸ், ஒன்லைன் சூதாட்டம், லொட்டரி, ரகசிய கூட்டங்கள் போன்ற சேவைகளை தரும் எண்களுக்கு வைரஸ் அழைப்புகளை அனுப்பி பில்களை அதிகரிக்க வைக்கிறது.

இத்தகைய வைரஸ்கள் நீங்கள் ரிங் டோன்களை டவுண்லோட் செய்திடுகையிலும் போனின் இன் பாக்ஸில் உள்ள இத்தகைய செய்திகளில் கிளிக் செய்திடுகையிலும் போன் உள்ளே வருகின்றன. இத் தகைய வைரஸ்களை அண்டவிமால் தடுப்பதற்கும் அன்டி வைரஸ் பக் கேஜ்கள் தரப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக நோக்கியா மொபைல் போன்கள் எப்-செக்யூர் என்னும் அண்டி வைரஸ் தொகுப்பை இறக்கி கொள்ளலாம். பிளாக்பெரிசேவை தரும் நிறுவனமும் இது போன்ற வைரஸ் எதிர்ப்பு தொகுப்புகளை வழங்குகிறது.

இந்த வைரஸ்கள் ஜி.பி.ஆர். எஸ். பயன்படுத்தாத போன்களை தாக்குவதில்லை இந்த ட்ரோஜன் வைரஸ் இயங்குவதற்கு 160 பைட்ஸ் மெமரிதேவையாகும். மேலும் ஜாவா இயங்கும் போன்களையே இவை தாக்குகின்றன.



> ஒன்றோடு ஒன்று சண்டை செய்யும் நாய்கள் ஓநாய்க்கு எதிராக ஒன்றுபடுகின்றன.
> —அர்மீனியா

வலம்புரி

## பயங்கரவாதம் பற்றிப் பேச சார்க் நாடுகளுக்கு தகைமை உண்டா?

சார்க் நாடுகளில் பயங்கரவாதம் மிகப் பெரும் சாபக்கேடு என சார்க் மாநாட்டின் தலைவரும் இலங்கை ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இதேபோல் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவது குறித்தும் தலைவர்கள் பலர் இங்கு கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாதம் என்பது பற்றி உரத்துக் கூறிய தலைவர்கள் எவரும் அந்தப் பயங்கரவாதம் ஏன் தோற்றம் பெற்றதென்பதை கூற மறந்து விட்டனர்.

அதேநேரம் அரச பயங்கரவாதம் என்பது பற்றிய சிந்தனையையும் சார்க் மாநாட்டில் பிரஸ்தாபித்திருந்தால் மாநாட்டின் நோக்கமும், தலைவர்களின் உரைகளும் அர்த்தமுடையவையாக இருந்திருக்கும்.

ஆனால், அரச பயங்கரவாதம் பற்றி எதுவுமே கூறப்படாமை ஆட்சியாளர்கள் தமது பதவியை காப்பாற்றிக் கொள்வதற்காக எதுவும் செய்யலாம், அதனை தட்டிக் கேட்பதற்கு எவருக்குமே உரிமையில்லை என்பதை நிரூபிப்பதாக அமைகின்றது.

பயங்கரவாதம் என்ற பதத்தை முன்வைத்து அதற்குள் தங்களின் தவறுகளை மறைத்துக் கொள்ளும் போலித்தனங்கள் நிம்மதியான மனித வாழ்வுக்கு ஒருபோதும் இடம் தராது.

ஒவ்வொரு நாடும் அமைதியான —சமாதானமான நாடாக விளங்கவேண்டுமாயின் அதற்கு அந்த நாட்டிலுள்ள சகல மக்களும் சம உரிமையுடையவர்களாக வாழும் தகுதி வழங்கப்பட வேண்டும்.

சார்க் நாடுகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை பயங்கரவாதமே என்ற கருத்தை முன்வைப்பவர்கள் சார்க் நாடுகளில் ஏன் அத்தகைய பிரச்சினைகள் உண்டென்பதை முதலில் உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஜப்பான் போன்ற நாடுகளின் அபிவிருத்தியும் அந்த நாடுகளில் நிலவும் அமைதிக்குமான முக்கிய காரணம் அங்கு மனிதநேயம், மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

இனம், மதம், மொழி என்ற பேதங் கடந்து எல்லோரும் மனிதர்கள், எல்லோருக்கும் சட்டம் பொதுவானது என்ற நியதி அங்கு கடைப்பிடிக்கப்படுகின்றது.

ஆனால் சார்க்கில் அங்கம் பெற்றிருக்கும் நாடுகளின் நிலைமையை ஒரு கணம் எடுத்து நோக்கினால், சார்க்கின் தலைமையைத் தற்போது பொறுப்பேற்றிருக்கும் இலங்கையில் பௌத்தமே ஆட்சிக்குரிய மதமாகவும் சிங்களமே ஆட்சி மொழியாகவும் உள்ளது.

பௌத்த பீடாதிபதிகள் கீறிய கோட்டைக் கடக்க முடியாத ஆட்சியாளர்களால் எதனைச் சாதிக்க முடியும்?

இனவாதம், மதவாதம், மொழிவாதம் என்ற மிகக் குறுகிய சிந்தனைக்குள் கிடந்து கொண்டு பயங்கரவாதம் பற்றி பேசுகிறது அந்த நாடு. இது எவ்வகையில் நியாயமாகும்.

முதலில் சார்க் நாடுகள் மனித உரிமைகளை பேணக் கற்றுக் கொள்ளட்டும். அதன் பின்னர் பயங்கரவாதம் பற்றி சிந்திக்க முடியும்.

# அமெரிக்க காங்கிரசின் பிரேரணைக்கு மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆதரவு

(கொழும்பு)

இலங்கையில் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பக குழுவை அனுமதிக்கவேண்டும் என்ற அமெரிக்க காங்கிரஸின் பிரேரணைக்கு ஆதரவு வழங்க சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தீர்மானித்துள்ளது.

விடுதலைப்புலிகளாலும் இலங்கை அரசாங்கத்தாலும் மீறப்படும் மனித உரிமைகளை கண்காணிப்பதற்கு சர்வதேச கண்காணிப்பாளர்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என அமெரிக்க காங்கிரஸ் அண்மையில் பிரேரணை ஒன்றை முன்வைத்திருந்தது.

இந்த பிரேரணைக்கு பூரண ஆதரவு வழங்குவதாக சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் விசேடமாக வரவேற்பதுடன் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் பதிலளிக்கவேண்டும் 25 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் இடம்பெற்று வரும் வன்முறைகளால் ஏற்பட்ட மனித உரிமை மீறல்களை அமெரிக்கா நீண்டகாலம் கவனத்தில் கொள்ளா திருந்துவிட்டது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சட்ட மற்றும் கொள்கைப் பணிப்பாளர் ஜெம்ஸ் ரோஸ் கூறியுள்ளார்.

இலங்கையில் அதிகரித்துச் செல்லும் மனித உரிமைகள் தொடர்பாக அமெரிக்க காங்கிரஸ் கவனம் செலுத்தியுள்ளது என்பதை இந்த பிரேரணை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக கொழும்பு சரியான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். பொய்யான வார்த்தைகள் இனியும் தேவையில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா அரசாங்கத்தின் வெளிநாட்டு கொள்கைகள் தொடர்பாக பல்வேறு சுயாதீன அமைப்புகள் அமெரிக்க காங்கிரஸின் வெளி விவகார குழு உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடிவருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் அதிகரித்து இருக்கும் மனித உரிமைகளை கண்காணிப்பதற்கு சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்புக்குழு நிறுவப்படவேண்டும் எனக் கோரி காங்கிரஸ் உறுப்பினர் பிரட்சேர்மன் மற்றும் பாரங்ப்லான் ஆகியோர் காங்கிரஸ் சபையில் பிரேரணை ஒன்றை முன்வைத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-6)

# கடமைக்குத் திரும்பாத 500பேர் இராணுவ பொலிஸாரால் கைது

(கொழும்பு)

முப்படைகளில் இருந்து தப்பி ஓடி அல்லது விடுமுறையில் சென்று கடமைக்கு திரும்பாத சுமார் ஐந்நூறு பேர் இராணுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தற்போது பனாகொடை இராணுவமுகாமில்தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும்இவர்கள் மீது இராணுவ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க பாதுகாப்பு அமைச்சு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

படைகளில் இருந்து சுமார் 15 ஆயிரம் பேர் வரை தப்பி ஓடி தலைமறைவாகி திரிகின்றனர் அண்மைக் கால மாக மீண்டும் சேவையில் இணைந்து கொள்ள வழங்கப்பட்ட மன்னிப்பு காலத்தில் சுமார் நாலாயிரம் பேர் வரை மீண்டும் சேவையில் இணைந்திருப்பதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதேவேளை இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களை மீண்டும் இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுராதபுரத்தில் வைத்து பகிரங்க வேண்டுகோள் விடுத்திருந்தார். அப்படி மீண்டும் அவர்கள் படைகளில் இணையாவிட்டால் யுத்த நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இராணுவத்தில் சேவையாற்றிய சுமார் 30 ஆயிரம் பேர் சட்ட பூர்வமாக சேவையில் இருந்து விலகி இருப்பதாக இராணுவ தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# யாப்பு விதிகளுக்கு முரணான முறையில் சார்க் மாநாடு-ஐ.தே.க குற்றச்சாட்டு

(கொழும்பு)

யாப்பு விதிகளுக்கு முரணான வகையில் 15ஆவது சார்க் மாநாட்டை இலங்கை அரசாங்கம் நடத்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. பிரபல சிங்கள இணையத் தளமொன்றில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

சார்க் மாநாடு தொடர்பான சட்ட விதிகளின் மூன்றாவது பிரிவின் அடிப்படையில் சார்க் உச்சி மாநாட்டிற்கு அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்கள் அல்லது அரசாங்கத் தலைவர்கள் மாத்திரமே கலந்துகொள்ள முடியும் என ஐக்கிய தேசியக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

பங்களாதேஷ் சார்பில் கலந்து கொள்ளும் பகுர்டீன் அஹமட்டை ஓர் அரச தலைவராக ஏற்றுக்கொள்ள முடியாதென ஐக்கிய தேசியக்கட்சி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் நேபாளத்தின் சார்பில் கலந்து கொண்டுள்ள பிரதமர் ஓர் தற்காலிக அடிப்படையில் செயற் பட்டு வருபவர் எனவும் இதனை ஓர் சட்டபூர்வமான மாநாடாகக் கருத முடியாதென வும் ஐக்கிய தேசியக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

மாநாட்டில் கலந்துகொள்ளும் இரண்டு நாடுகளின் அரச தலைவர்கள் தொடர்பில் சிக்கல் ஏற்பட்டுள்ள நிலையில் இலங்கை அரசாங்கம் விதிகளை மீறிச் செயற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# இலங்கையில் 3வருடங்கள் மட்டுமே வெளிநாட்டவர்கள் பணிபுரிய முடியும்

(கொழும்பு)

இலங்கையில் பணிபுரிய வரும் வெளி நாட்டவர்கள் 03 வருடங்களுக்கு மட்டுமே தங்கியிருக்க முடியும் என சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை உட்துறை அமைச்சு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இக்கட்டுப்பாட்டை விதித்துள்ளது.

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பணியாளர்களைச் சேர்க்கும் போது முடியுமானவரை இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கே பணிபுரிய நியமனம் வழங்கப்பட வேண்டும்.

இலங்கை சட்ட திட்டங்களை அலட்சியம் செய்வோரின் விசா முடிவுறுத்தப்படும்.இப்படி பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது.

(அ-6)

# வரவு செலவுத் திட்ட வாசிப்பு நவம்பர் 6ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

2009ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட உரையை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நவம்பர் 6ஆம் திகதி பாராளுமன்றத்தில் வாசிப்பார்.

2ஆம் வாசிப்பைத் தொடர்ந்து நவம்பர் 7ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 12ஆம் திகதிவரை குழு நிலை விவாதம் நடைபெறும். வரவு செலவுத் திட்ட இறுதி வாக்கெடுப்பு டிசம்பர் 12ஆம் திகதி நடை பெறும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் தனது பதவியை இராஜினாமாச் செய்த திறைசேரியின் செயலாளர் கலாநிதி பி.பி.ஜெயசுந்தர 2009 ஆம் ஆண் டுக்கான வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிக்கும் பணியை ஆரம்பித்துள்ளதாகவும்,சார்க் மாநாடு முடிவடைந்த தும் அவர் தனது பதவியில் தொடர்ந்து இருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

ஓலைச் சுவடிகள் 70

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### நெஞ்சில் கைகட்டி தூங்கலாமா?

பெரியவர்களில் கூட நெஞ்சில் கைகட்டி உறங்கும் வழக்கம் உள்ள நபர்கள் உள்ளனர். மலர்ந்து படுத்து இரு கைகளையும் சேர்த்துக்கட்டி தூங்கும் பழக்கம் பலரிடம் உண்டு. ஒரு போதும் இவ்வாறு கட்டி உறங்கக் கூடாது என்று ஆசாரவிதி கூறுகின்றது. ஆனால் பலருக்கும் தூக்கத்தின் சொகுசை அனுபவிக்க கைகட்டித் தூங்குவது அவசியமாக இருக்கின்றது.

ஆனால் இது உடல் நலத்துக்கு அவ்வளவு நல்லதல்ல என்பதைத் கண்டறிந்துள்ளனர் . இப்படிக் கைகட்டுதல் இதய அசைவுகளை பாதிக்கும். இதயத்துக்கும் மேல் மிகையான அழுத்தம் ஏற்படும். இதனால் சுவாசத்துக்குத் தடை ஏற்படலாம். இப்படி உறங்கும் பலருக்கும் இதய நோய் பாதிப்பு உண்டானதாகக் கண்டறிந்துள்ளனர்.

# கிழக்கு நோக்கி திரும்பும் அரசின் கவனமும் அனைத்துலகத்தின் பிரிவினைகளும்

தெற்காசிய பிராந்திய நாடுகளின் கூட்டமைப்பு கூட்டத்திற்கான நல்லெண்ண சமிஞைகளை விடுதலைப்புலிகள் போர் நிறுத்த மூலம் வெளிப்படுத்தியிருந்தபோதும் இலங்கை அரசாங்கம் அதன் படை நடவடிக்கைகளை தொடர்ந்தவாறுள்ளது. விடுதலைப் புலிகள் அறிவித்த போர் நிறுத்தம் கடந்த 26ஆம் திகதி ஆரம்பமாகியபோதும் இலங்கை அரசாங்கம் மன்னார், மணலாறு, வன்னி கள முனைகளில் படை நடவடிக்கைகளை தொடர்ந்து வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கட்கிழமை ஆகிய நாட்களில் பாலமோட்டை மற்றும் மணலாறு களமுனைகளிலும் கடந்த புதன்கிழமை பாலமோட்டை கள முனையிலும் படையினர் முன் நகர்வுகளை மேற்கொண்டிருந்தனர். இந்த படை நடவடிக்கைகளுக்கு எதிராக விடுதலைப்புலிகளும் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

வன்னிப்பகுதியில் படை நடவடிக்கைகளை தொடர்வதாகவும் விடுதலைப்புலிகளின் பதுங்கு குழிகளை தாம் கைப்பற்றி வருவதாகவும் அரசாங்கம் தொடர்ந்து தெரிவித்து வருகின்றது. படை நடவடிக்கை மட்டுமல்லாது போர் நிறுத்த காலத்தில் வன்னிப் பகுதிக்கான தொலைத்தொடர்புகளும் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளதுடன் அதன் வெளியுலக தொடர்புகளை தடுக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரச அலுவலகங்கள், வைத்தியசாலைகள், உதவி அமைப்புக்கள் என அத்தியாவசிய சேவைகளை மேற்கொண்டுவந்த நிறுவனங்களின் 500ற்கும் மேற்பட்ட தொலைபேசி இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதால் அங்கு நடைபெறுவரும் மோதல்களினால் இடம்பெயர்ந்த 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களும் அங்கு வாழும் மக்களும் பெரும் அவலத்தை சந்தித்துள்ளனர்.

மேலும் கடந்த புதன்கிழமை உலவு விமானத்தின் வழிகாட்டலுடன் கிளிநொச்சி மாவட்டம் திருவையாற்று பகுதியில் இலங்கை வான் படையின் இரு மிக்.27 ரக தாக்குதல் விமானங்கள் குண்டு வீச்சுத்தாக் குதலையும் மேற்கொண்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் தென் ஆசியப் பிராந்திய நாடுகளின் சமாதானம் மற்றும் அமைதி ஆகியவற்றை கருத்தில கொண்டு போர்

போதும் இலங்கை கடற்படையினர் இலங்கை கடற்பரப்பில் காவலில் ஈடுபட்டு வருகின்றனர். 1987ஆம் ஆண்டு இலங்கை அரசின் எதிர்ப்புக்களையும் மீறி 6 அன்ரனோவ் - 32பி கனரக சரக்கு விமானங் கள் மற்றும் 4 மிராஜ்-2000 தாக்குதல் விமானங்கள் மூலம் இலங்கை வான் பரப்பை தன் வசப்படுத்திய இந்தியதரப்பு மேற் கொண்ட பூகோள அரசியல் தற் போது கடற் பரப்பில் தொடர்கின்றது.

ஆனல்

அனைத்துலக தராதரத்திற்கு இணையாக மனித உரிமைகளை பேணாது விட்டால் ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தகவரிச் சலுகை நீடிப்பை இழக்க வேண்டி ஏற்படும் என எச்சரித்துள்ளனர்.

இந்தியாவினால் அதிக முதலீடுகள் மேற் கொள்ளப்பட்டு வரும்



நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து வருகையில் லெப்.கேணல் நகுலன் தென்னிலங்கையில் மேற்கொள்ளப்படும் ஆளஊடுருவும் நடவடிக்கைகளையும் சிறப்புப் படை நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்தப் படைஅணியின் ஒரு குழுவினர் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் தம்பலகாமம் சந்தியை கடந்து சென்றது அவதானிக்கப்பட்டுள்ளதாக அவை மேலும் தெரிவித்துள்ளன.

அம்பாறை மாவட்ட காடுகளில் விடுதலைப்புலிகளை தேடிக் கண்டறி வதில் அங்கு நிலை கொண்டுள்ள சிறப்பு அதிரடிப்படையினருக்கு பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதுடன் அங்கு தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன. விடுதலைப்புலிகள் கனரக துப்பாக்கிகள், 81மி.மீ ரக நடுத்தர மோட்டார்களையும் தாக்குதல்களுக்கு பயன்படுத்தி வருவது படையினருக்கு பெரும் தலையிடிகளை ஏற்படுத்தி வருகின்றது. அங்கு மாறிவரும் சூழ்நிலை அரசாங்கத்தின் பிரச் சாரங்களை புறந்தள்ளும் நிலையை அடைந்து வருகின்றது. இதனைத் தொடர்ந்து கிழக்கில் மே[illegible]திக பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு படைத் தரப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

மகாஓயா-அம்பாறை வீதியில் அமைந்திருக்கும் இரு சிறப்பு அதிரடிப்படை முகாம்களை முன்னர் அரசாங்கம் அகற்றி இருந்தது தற்போது அவற்றை மீண்டும் அங்கு அமைக்கும் முயற்சிகளில் படைத்தரப்பு ஈடுபட்டுள்ளது. திருக்கோயில், அரந்தலாவா, பியன்கலா, புலுக்குணாவா ஆகிய சிறப்பு அதிரடிப்படை முகாம்களும் பலப்படுத்தப் பட்டு வருகின்றன.

விடுதலைப்புலிகளின் நகர்வுகளை தடுப்பதற்காக படைத்தரப்பு கந்தளாய், திருமலை வீதியில் உள்ள குரங்குப்பாலத்தில் அமைந்திருந்த சிறப்பு படை பிளட்டூன் துருப்புக்களை மொறவெவ பகுதிக்கு நகர்த்தியிருந்தது. எனினும் அண்மைக் காலமாக விடு தலைப் புலிகளின் தாக்குதல்கள் கிழக்கிலங்கையில் அதிகரித்து வருதை தொடர்ந்து பொலநறுவை மட்டக்களப்பு வீதியில் உள்ள சித்தாண்டி பகுதியில் புதிய பிரிகேட் ஒன்றை அமைக்கும் நடவடிக்கையை படைத்தரப்பு பரிசீலித்து வருகின்றது. தொப்பிக்கல, வாகரை, சித்தாண்டி என பல பிரிகேட் படையினரை அங்கு நிறுத்த வேண்டிய கட்டாயம் தற்போது படைத் தரப்புக்கு ஏற்பட்டுள்ளது.

இவை தவிர திருமலைத்துறைமுகத்தை சம்பூர் ,மூதூர், கிண்ணியா, சீனன்குடா ஆகிய பகுதிகளுடன் இணைக்கும் நெடுஞ்சாலையையும் சேருவில- ஹபரணை- பொலநறுவை பகுதிகளை இணைக்கும் நெடுஞ்சாலை ஒன்றையும் நிர்மானிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

அதிகளவான படையின்ரை மிகவும் விரைவாக நகர்த்துவதற்கு இந்த வீதிகள் அவசியமானது என்பது படைத்தரப்பின் வாதம் இந்நிலையில் இந்த வீதிகளின் நிர்மாணப் பணிகளில் இராணுவ பொறியியல் பிரிவினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

படைத் தரப்பை பொறுத்தவரையில் வட பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் படை நடவடிக்கைக்கு பெருமளவான படையினர் தேவை என்ற நிலை தற்போது தோன்றியுள்ளது. களமுனைகளில் இருந்து அகற்றப்படும் படையினர் இராணுவத்தில் இருந்து வெளியேறும் படையினர் ஆகியோரை ஈடுசெய்வதற்கும் கைப்பற்றப்படும் நிலப்பரப்புக்களை தக்க வைப்பதற்கும் இராணுவத்திற்கு அதிகளவான படையினர் தேவை ஆனால் தற்போது புதிதாக அமைக்கப்படும் பிரிகேட்டுக்களை கிழக்கிலங்கை நோக்கி நகர்த்த வேண்டிய கட்டாயமும் அரசிற்கு ஏற்பட்டுள்ளது.

## வேல்ஸிலிருந்து அருஷ்

அரசாங்கத்திற்கு அதிகரித்து வரும் இந்த நெருக்கடிகள் விடுதலைப்புலிகள் வலிந்த தாக் குதலை ஆரம்பிக்கும் போது மேலும் அதிகரிக்கும் என்பதுடன் தெற்காசிய பிராந்தியத்திற்கான போட்டிகளினால் முனைவாக்கம் பெற்றுவரும் அனைத்துலகின் பிரிவினைகளும் மேலும் அதிகரிக்கலாம்.

அதன் உண்மை நோக்கம் இலங்கை

திருமலைக்கு ஐரோப்பிய ஒன்றியக் குழு மேற்கொள்ளத் தீர்மானித்திருந்த விஜயத்தை பாதுகாப்பு காரணங்களை முன் னிட்டு இலங்கை


## இலங்கை கடற்பரப்பை தன்வசப்படுத்துவதே இந்திய அரசின் உண்மையான நோக்கம்

அரசை பணிய வைப்பதாகும் என் பதே அல்லாமல் தமிழ் மக்களுக்கு ஆதர வானது என கருதி விட முடியாது.

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய போர்க்கப்பல்களின் தரம் அவர்கள் இந்து சமுத்திர பிராந்தியத்தில் தலையிடும் நாடுகளுக்கே அச்சுறுத்தல்களை ஏற்படுத்த முனைகின்றனர் என்பதை தெளிவு படுத் தியுள்ளது.

அரசாங்கம் இறுதி நேரத்தில் தடுத்தமை அவர்களுக்கு அதிக சினத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கைக்கான தமது விஜயத்தின் முக்கிய நோக்கம் திருமலைக் கான விஜயமே என ஐரோப்பிய ஒன்றியக் குழு தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத் தக்கது.

கிழக்கு தொடர்பாக மேற்குலகும்- தெற்காசிய நாடுகளும ஒன்றுகொன்று முரண



நிறுத்தம் மேற்கொண்டுள்ள போதும் படையினரின் வலிந்த தாக்குதலுக்கு எதிராக தாக்குதல்களை அவர்கள் மேற்கொள்வார்கள் என்பதை யாரும் நிராகரித்து விட முடியாது.

படைத்தரப்பு வட போர் முனையில் நாகர் கோவில் -முகாமாலை- கிளாலி அச்சில் கடந்த ஞாயிறும் மற்றும் திங்கட்கிழமைகளில் தொடர்ச் சியாக கடுமையான பீரங்கி மற்றும் பல் குழல் உந்துகணை செலுத்தி தாக்குதல்களை மேற்கொண்டிருந்தது.

இதனிடையே இந்து சமுத்திர பிராந்தியத்தில் தனது ஆளுமையை தக்க வைப்பதற்கு இந்திய அரசு போர்க் கப்பல்கள் இரண்டை இலங்கையின் கடல் பகுதிக்கு அண்மையாக நகர்த்தியுள்ளது.

எனினும் இந்திய அரசின் இந்த நட வடிக்கைகளால் தென்னிலங்கையில் அரசியல் நெருக்கடிகள் ஏற்படுவதை தடுக்கும் நோக்கத்துடன் இலங்கை அரசும் தனது கடற்படையின் கணிசமான தாக்குதல் கலங்களை கொழும்பை அண்டிய கடற்பகுதிக்கு நகர்த்தியுள்ளது.

இந்திய கடற்படையின் போர்க் கப்பல்களான ஐ.என்.எஸ்.ரன்வீர் , ஐ.என்.எஸ். மை சூர் என்பவை இலங்கை கடற்பிர தேசத்திற்கு அண்மையாக நங்கூரமிட்டுள்ள

2000ஆம் ஆண்டு நியூயோர்க்கில் நடைபெற்ற அனைத்துலக கடற்படையினரின் அணிவகுப்பில் கலந்துகொண்ட ஐ. என். எஸ்.மைசூர் போர்க் கப்பலின் இலங்கை விஜயம் அதன் பூகோள அரசியலை தெளி வாக எடுத்துக்காட்டியுள்ளது.

இந்திய கடற்படையினரின் இந்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் இலங்கை கடற்படையினரும் தமது கடற்படை கப்பல்களை கொழும்பு கடற்பகுதிக்கு நகர்த்தியுள்ளனர். இலங்கை கடற்படையின் கப்பல் தொகுதியில் ஆழ்கடல் கண்காணிப்பு கப்பல்கள், அதி வேக தாக்குதல் போறாப்படகுகள், உட்கரையோர நீருந்து விசைப்படகுகள், அதிவேக பீரங்கிப்படகுகள் என்பவற்றுடன் புதிதாக உருவாக்கப்பட் விரைவு நடவடிக்கை படகுக் தாக்குதல் ஸ்குவாட்ரன் படையினரும் அடங்கியுள்ளதாக கடற்படையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசினதும் இலங்கை அரசினது இந்த கூட்டு நடவடிக்கைகளுக்கு மத்தியில் மேற்குலகம் தனது தரப்பு அழுத்தத்தை இலங்கை மீது மெல்ல மெல்ல இறுக்கி வருகிறது. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐரோப்பிய ஒன்றிய தூதுக் குழுவைச் சேர்ந்த பிரதிநிதிகள் இலங்கை அரசு

பட்டு வருகையில் கிழக்கின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தல்கள் எழுந்துள்ளதை அரசாங்கம் தற்போது உணர தலைப்பட்டுள்ளது. கடந்த வாரம் புல்மோட்டை கடற்பரப்பில் நடைபெற்ற கடல் சமரின் போது விடுதலைப் புலிகளின் 3 படகுகள் மூழ்கடித்துவிட்டதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளபோதும் விடுதலைப் புலிகளின் கிழக்கிற்கு ஒரு தொகுதி படையினரை தரையிறக்கியுள்ளதாகவே படையினரின் புலனாய்வுத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் படையினர் மேற்கொண்ட தேடுதல்களின் போது கும்பிறுப்பிட்டி மற்றும் திரியாய் பகுதிகளில் இரு சிறிய தற்காலிக துறைமுகங்கள் அமைக்கப்பட்டிருந்த தடயங்களை அவதானித்துள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தற்காலிகமாக அமைக்கப்படும் துறைமுகங்களால் விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்திற்கு தமது உறுப்பினர் களையும் ஆயுத தளபாடங்களையும் நகர்த்தி வருவதாக அவை மேலும் தெரிவித்துள்ளன.

கிழக்கில் 150 விடுதலைப் புலிகள் கேணல் ராம் மற்றும் லெப்கேணல் நகுலன் தலைமையில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது. கேணல் ராம் கிழக்கு மாகாண

# பழி தீர்த்தது இந்திய அணி; காலி டெஸ்டில் இலங்கை தோல்வி

(காலி)

இரண்டாவது டெஸ்டில் இந்திய அணி 170 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தி தொடரை 1:1 என்ற கணக்கில் சமநிலை செய்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் 307 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 136 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டெஸ்ட்,5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் கொழும்பில் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்ற இலங்கை அணி தொடரில்1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 31ஆம் திகதி காலியில் ஆரம்பமானது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 329 ஓட்டங்களை எடுத்தது.

இதில் வீரேந்திர சேவாக் ஆட்டமிழக்காமல் 201 ஓட்டங்களையும் காம்பீர் 56 ஓட்டங்களையும் கங்குலி 39 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மெண்டிஸ் 6 விக்கெட்டுக்களையும் வாஸ், முரளிதரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய, இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 292 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன 86 ஓட்டங்களையும் சங்கக்கார 68 ஓட்டங்களையும் வர்ணபுர 66 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 6 விக்கெட்டுக்களையும் கும்ளே 3 விக்கெட்டுக்களையும் சகீர்கான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 37 ஓட்டங்களால் முன்னிலையில் இருந்த இந்திய அணி 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் 3ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்டுக்களை



இழந்து 200 ஓட்டங்களை எடுத்திருந்தது.

4ஆம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி மேலதிகமாக 69 ஓட்டங்களை எடுத்து மதிய போசன இடைவேளைக்கு முன்பாக அதன் இரண்டாவது இன்னிங்ஸில் 269 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் இலங்கை அணிக்கு வெற்றி இலக்காக 307 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

இதில் காம்பீர் 74 ஓட்டங்களையும் சேவாக் 50 ஓட்டங்களையும் ராவிட் 44, டெண்டுல்கர் 31, தினேஸ் கார்த்திக் 20 மற்றும் கங்குலி 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மெண்டிஸ் 4 விக்கெட்டுக்களையும் முரளிதரன் 3 விக்கெட்டுக்களையும் மற்றும் வாஸ் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

### ஆரம்பம் முதலே விக்கெட் சரிவு

பதிலுக்கு 307 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இலங்கை அணி ஆரம்பம் முதலே இந்திய பந்துவீச்சாளர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் விக்கெட்டுக்களை இழந்தது.

இலங்கை அணி 4 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தபோது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வர்ணபுர ஓட்டமெதனையும் எடுக்காமல் இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சில் லக்ஸ்மனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த சங்கக்காரவும் ஒரு ஓட்டத்துடன் சகீர்கானின் பந்துவீச்சில் லக்ஸ்மனிடம் பிடிகொடுத்தும் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன 5 ஓட்டங்களுடன் இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சில் ராவிட்டிடம் பிடிகொடுத்தும் ஆட்டமிழக்க இலங்கைஅணி பத்து ஓட்டங்களை மாத்திரம் எடுத்த நிலையில் முக்கிய மூன்று விக்கெட்டுக்களை இழந்தது.

அடுத்து 4-வது விக்கெட்டுக்காக களமிறங்கிய சமரவீர நம்பிக்கையளித்தபோதும் மறுமுனையில் நிதானமாக ஆடிய வான்டொட் 10 ஓட்டங்களுடன் ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து சமரவீரவுடன் ஜோடி சேர்ந்த டில்சான் பொறுப்புடன் துடுப்பெடுத்தாட இலங்கை அணி 100 ஓட்டங்களை கடந்தது.

எனினும் இலங்கை அணி 113 ஓட்டங்களை எடுத்தபோது டில்சான் 38 ஓட்டங்களை எடுத்த நிலையில் இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் தினேஸ் கார்த்திக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பிரசன்ன ஜெயவர்த்தன (04), வாஸ் (0), குலசேகர (01), மெண்டிஸ் (02) முரளி (0) என அடுத்தடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 2-வது இன்னிங்ஸில் 136 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் சமரவீர ஆட்டமிழக்காமல் 67 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 4 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா 3 விக்கெட்டுக்களையும் கும்ளே 2 விக்கெட்டுக்களையும் சகீர்கான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1:1 என்ற கணக்கில் சமன் செய்தது.

இப்போட்டியின் நாயகனாக முதலாவது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காமல் 201 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 50 ஓட்டங்களையும் எடுத்து இந்திய அணியின் வெற்றிக்கு வழியமைத்த வீரேந்திர சேவாக் தெரிவானார்.

இப்போட்டி நான்காம் நாளுடன் முடிவடைந்த நிலையில் மூன்றாவது டெஸ்ட் எதிர்வரும் 8 ஆம் திகதி கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றது. (5)

## தென்னாபிரிக்கா வரலாற்று வெற்றி

இங்கிலாந்துடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியை தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதன் மூலம் தென்னாபிரிக்க அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 4 டெஸ்ட் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது போட்டி சமநிலையானதுடன் 2-வது டெஸ்டில் தென்னாபிரிக்க அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ள நிலையில் 3-வது டெஸ்ட் எஜபாஸ்டனில் கடந்த 30 ஆம் திகதி ஆரம்பமானது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 231 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தொடர்ந்து முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்கா 314 ஓட்டங்களை குவித்தது.

இந்நிலையில் முதல் இன்னிங்ஸில் 83 ஓட்டங்களால் பின்னிலையில் இருந்த 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி கொலிங்வூட் (135) பீற்றர்சன் (94) ஆகியோரின் சிறப்பாட்டத்தின் மூலம் 98.2 ஓவர்களில் 363 ஓட்டங்களைக் குவித்தது.

இதன்படி தென்னாபிரிக்காவுக்கு 281 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

ஆட்டத்தின் 4-வது நாளான நேற்று முன்தினம் வெற்றி இலக்கை நோக்கி 2 -வது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி அணித்தலைவர் சிமித்தின் அபார சதத்தின் மூலம் 5 விக்கெட்டுக்களை மாத்



திரம் இழந்து 283 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

246 பந்துகளுக்கு முகம் கொடுத்த சிமித் ஆட்டமிழக்காது 154 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன்போது அவர் டெஸ்டில் 5 ஆயிரம் ஓட்டங்களை கடந்த 4-வது தென்னாபிரிக்க வீரராகவும் சிமித் பதிவானார்.

அத்துடன் அவர் போட்டியின் ஆட்டநாயகன் விருதையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை ஓவல் மைதானத் தில் ஆரம்பமாகவுள்ளது.

கடந்த 1965ஆம் ஆண்டுக்கு பின்னர் இங்கிலாந்து மண்ணில் தென்னாபிரிக்கா அணி டெஸ்ட் தொடர் ஒன்றில் வெற்றி பெறுவது இதுவே முதல் முறையாகும். (5)

## மழையைத் தடுக்கும் நவீன தொழில் நுட்பம் ஒலிம்பிக் ஆரம்ப விழாவில் சோதனை

(பிஜீங்)

ஓகஸ்ட் 8ஆம் திகதி பிஜிங்கில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும் வாய்ப்பு உள்ளது என்று வானிலை ஆராய்ச்சி மையத்தின் துணைஇயக்குநர் வாங் ஜியான்ஜி தெரிவித்துள்ளார்.

இது குறித்து வாங் ஜியான்ஜி பத்திரிகையாளர் சந்திப்பில் கூறுகையில்,

ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் ஓகஸ்ட்




8-24 திகதிகளில் பசுபிக் பெருங்கடலில் சூறாவளிக் காற்று வீசும். இதனால் ஹொங்கொங்கில் நடைபெறும் குதிரையேற்றப் போட்டி மற்றும் கடற்கரை நகரான ஷாங்காயில் நடைபெறும் கால்பந்துப் போட்டிகள் பாதிக்கப்படும்.

மேலும் சீனாவின் வட கிழக்கில் அமைந்திருக்கும் துறைமுக நகரான ஹிங்டாவில் நடைபெறவுள்ள படகுப் போட்டியும் பாதிக்கப்படும்.

பொதுவாக சூறாவளி, காற்று இரண்டு நாட்களுக்கு நீடிக்கும். இதனால் ஒலிம்பிக் போட்டிகள் பெரிய அளவில் பாதிக்காது.

ஆரம்ப விழாவுக்கு முன்னும் அதற்குப் பின்னாலும் பலத்த மழை இருக்காது. ஒலிம்பிக் ஆரம்ப விழா நடைபெறும் ஆகஸ்ட் 8ஆம் திகதி மாலை மழை பெய்யும் வாய்ப்பு உள்ளதா என்று வானிலை தொழிநுட்பத்தால் துல்லியமாகக் கணிக்கமுடியாது.

இருப்பினும் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் என வானிலை கட்டுப்பாட்டு மையத்தின் தலைவர் ஜாங் கியாங் கூறுகையில்,

மழையைத் தடுக்கும் நவீன தொழில் நுட்பம் சோதனையளவில் உள்ளது. இதைக் கொண்டு சின்ன மேகங்களை கட்டுப்படுத்த முடியும்.

சூழ்நிலை சாதகமாக இருந்தால் ஒலிம்பிக் ஆரம்ப நாளன்று சில திட்டங்களை முயற்சி செய்து பார்ப்போம் எனக் கூறினார். (5)

## ஒலிம்பிக்கில் 11028 போட்டியாளர்கள்

ஒலிம்பிக்கில் 104 நாடுகளைச் சேர்ந்த 11 ஆயிரத்து 28 போட்டியாளர்கள் பங்கு பற்றவுள்ளனர்.

பிஜிங் ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழு விடுத்துள்ள உத்தியோக பூர்வ அறிக்கையில் இந்த தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை சீனா சார்ப்பாக 639 போட்டியாளர்கள் உட்பட்ட ஆயிரத்து 699 பேர் கலந்து கொள்கின்றனர்.

ஒலிம்பிக் போட்டி ஒன்றில் சீனா முதற்தடைவையாக இவ்வாறு கூடுதலான எண்ணிக்கையில் வீரர்களை பங்கு பற்றச் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

## கையேடுகளை பெற்றுக் கொள்ளவும்

வலம்புரி நடத்தும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகளுக்குரிய கையேடுகளை நாளை காலை 8 மணிக்கு கோட்டக் கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இக் கருத்தரங்கு யாழ்.கல்வி வலயத்திலுள்ள குறிப்பிட்ட சில பாடசாலைகளில் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கிளிநொச்சி மாவட்டத்திற்குள்...

மாவட்டத்துக்குள் படையினர் தெற்கிலிருந்து முன்னகர்வை மேற்கொண்ட முதலாவது சந்தர்ப்பமாகவே இது கருதப்படுகிறது. இதுவரையில் வடக்கிலிருந்து மட்டுமே படையினர் கிளிநொச்சி மாவட்டத்துக்குள் பிரவேசித்தனர்.

ஆயினும்இம்முறைபடையினரால் மேற்கொண்டமுன்னகர்வுமுயற்சிபடையினருக்கு கிடைத்த பாரிய வெற்றியே ஆகும்.

கடந்த வருடம் மன்னார் பிரதேசத்திற்குள் முன்னகர்ந்த இராணுவத்தின் 58 ஆவது படையணியினர் விடத்தல் தீவு, இலுப்பைக்கடவை, மற்றும் வெள்ளாங்குளம் என்று தொடர்ந்தும் தமது முன்னகர்வு முயற்சிகளை மேற்கொண்டு ஏ32 வீதியினூடாக கிளிநொச்சி மாவட்டத்துக்குள் முன்னகர்ந்துள்ளனர்.

இதேவேளை நாட்டின் இடதுபுறக் கரையோரப் பிரதேசம் முழுவதும் தற்போது இராணுவத்தின் கட்டுபாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் விடுதலைப் புலிகளின் கடல் மார்க்க நடவடிக்கை அனைத்தும் தற்போது படையினரால் முறியடிக்கப்பட்டுள்ளன. (ச-5)

## மனித...

தான்-41, நேபாளம்-24, இந்தியா-24, மாலைதீவு-23, ஆப்கானிஸ்தான் இந்தப் புள்ளி விபரங்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இச் சுட்டெண் கணிப்பீட்டுக்காக 9 காரணிகள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன. அரசியல் சுதந்திரம், உயிர் வாழ்வதற்கான உரிமை, நீதி - நிர்வாகம், தேசிய மனித உரிமைகளின் செயற்றிறன், ஊடக சுதந்திரம், பெண்களுக்கெதிரான வன்முறைகள், சிறுவர் உரிமை மீதான வன்முறை , சிறுபான்மை இனத்தவர் மீதான வன்முறைகள், மனித உரிமைகளை நிலைநாட்ட முயல்பவர்கள் மீதான வன்முறைகள் போன்ற காரணிகள் கருத்தில் எடுக்கப்பட்டிருந்தன.

இக் காரணிகளின் அடிப்படையில் தென்னாசியப் பிராந்தியத்தில் இலங்கையே மிகவும் மோசமான மனித உரிமை மீறல்களைக் கொண்டிருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ச-5)

## சார்க்...

மற்றும் பயங்கரவாதத்தினை முறியடித்தல் போன்ற விடயங்களுக்கு இந்த மாநாட்டில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

சார்க் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் இலங்கை நாடாளுமன்றத்திற்கு விஜயம் செய்து அங்கும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தனர். (ச-5)

## இந்தியப் பிரதம மந்திரிக்கு...

பட்டார்.

முன்னும் பின்னும் வாகனங்கள் பாதுகாப்பு வழங்க இந்தியப் பிரதமரின் வாகனத்தை கபில ஜெயசேகர என்பவர் ஓட்டிச் சென்றார். ஜனாதிபதி செயலகத்தில் இந்தியப் பிரதமரை சேர்ப்பித்தவுடன் அவரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்.

இரு நாட்டுத் தலைவர்களுக்குமான பேச்சுக்கள் நடைபெற்றன. சந்திப்பை நிறைவு செய்து கொண்டு வெளியே வந்து தனது வர்கனத்தில் ஏறினார் இந்தியப் பிரதமர். ஆனால் அவரது வாகனத்தை வரும்போது ஓட்டி வந்த கபில சேகரவைக் காணவில்லை.

உடனே அங்கு பதற்றம் ஏற்பட்டது. உடனே,வரும்போது பிரதமரின் பாதுகாப்பு அணியில் வந்த இந்திய பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் பிரதமரின் வாகனத்தை ஓட்டுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டார்.பதற்றம் நீங்கி வாகனங்கள் ஒன்றின்பின் ஒன்றாக மெல்ல மெல்ல நகரத் தொடங்கின.

அப்போது எங்கிருந்தோ ஓடிவந்த - வரும்போது இந்தியப் பிரதமரின் வாகனத்தை ஓட்டி வந்த கபில ஜெயசேகர வாகன அணி புறப்படுவதைக் கண்டு பதற்றமடைந்து, இந்தியப் பிரதமர் பயணம் செய்த வாகனத்தைக் கலைத்துச் சென்று அதன் பின் யன்னல்களைத் தட்டி நிறுத்தச் சொன்னார்.

இதனை அவதானித்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவரை ஓடிச் சென்று பிடித்து வந்து நிலைமையை எடுத்துக் கூறி பிரதமரின் வாகன அணி தொடர்ந்து பயணம் செய்ய ஒழுங்கு செய்தனர்.

இச் சம்பவத்தைக் கேள்வியுற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்ட வாகன ஓட்டுநர் கபில ஜெயசேகரவை நேரடியாக அழைத்து, சம்பவம் தொடர்பாக விளக்கம் கோரியதுடன் இனிமேல் பாதுகாப்பு விடயத்தில் கவனமாக இருக்கும்படி எச்சரித்தும் அனுப்பினார். (ச-5)

## மல்லாவியில் இடம்பெற்ற...

தமிழீழ விடுதலைப்புலிகள் சார்க் மாநாட்டை முன்னிட்டுஅறிவித்திருந்த ஒருதலைப்பட்சபோர் நிறுத்தம் இன்றுடன் நிறைவுக்கு வருகின்றது.

இந் நிலையில் படையினர் கிளிநொச்சி மாவட்டத்திற்குள் பிரவேசித்துள்ளதாகப்பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது. எனினும் இதனைச் சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை எனத் தெரிவித்துள்ள சண்டே ரைம்ஸின் பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ்,

தமிழீழ விடுதலைப்புலிகளின் இதயப் பகுதிகளில் வரும் நாள்களில் பாரிய மோதல்கள் இடம்பெறுவதைத் தடுக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

படையினர் தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க திடசங்கற்பம் கொண்டுள்ளமை இதற்கான காரணம் என அவர் தெரிவித்துள்ளார். சார்க் மாநாட்டின்போது ட்ரான்ஸ் ஏசியா ஹோட்டலில் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்க முற்பட்டார்.

அவருக்கு உதவியாக இராணுவ விமானப் படை மற்றும் கடற்படை அதிகாரிகள் விளக்கங்களை வழங்கினர். எனினும் இந்த நிகழ்வுக்கு சுமார் 200 ஊடகவியலாளர்களை எதிர்பார்த்திருந்தபோதும் 30 பேரே வருகை தந்திருந்தனர்.

இதேவேளை துருப்பினர் மல்லாவியைக் கைப்பற்ற முனைந்தபோதும் துணுக்காயைக் கைப்பற்றியபோதும் பாரிய எதிர்த் தாக்குதல்களை சந்திக்க வேண்டியிருந்தது. எனினும் அதனைப் பற்றி மேலதிகமாகத் தெரிவிக்க முடியாத சூழ்நிலையுள்ளதாக இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## ஜனநாயகத்தை வலுப்...

இலங்கை அரசாங்கம் சகல மக்களினது மனித உரிமைகளை மதிப்பதோடு ஜனநாயகத்தை வலுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலாளர் றிச்சட் பௌச்சர் தெரிவித்தார்.

பயங்கரவாதத்திற்கு எதிராக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா முழுமையான ஆதரவளிக்கும். தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகளுக்கு எந்த மன்னிப்பும் வழங்கப்பட மாட்டாது.

சகல இன மக்களினதும் நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வைக் காண்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் றிச்சட் பௌச்சர் வலியுறுத்தினார்.

கொழும்பில் நடைபெற்ற 15-வது சார்க் உச்சி மாநாட்டில் அவதானிப்பாளராகக் கலந்து கொண்ட தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலாளர் றிச்சட் பௌச்சர் மாநாடு தொடர்பான தமது அவதானிப்புக்களை நேற்று முற்பகல் கொழும்பு ரான்ஸ் ஏசியா ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த றிச்சட் பௌச்சர் மேலும் கூறியதாவது,

சகல வடிவிலான பயங்கரவாதத்தையும் வன்மையாகக் கண்டித்துள்ள தெற்காசிய நாடுகள் பயங்கரவாதத்திற்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உறுதி பூண்டுள்ளன.

உணவுப் பாதுகாப்பு, சக்தி, காலநிலை மாற்றம், சூழல் பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்களில் ஒன்றுபட்டுச் செயற்படுவதற்குப் பிராந்திய நாடுகள் இணங்கியுள்ளமை சிறந்த அம்சமாகும்.

இலங்கையில் மக்கள் அச்சமின்றி சுதந்திரமாகத் தமது இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ளும் சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்

பயங்கரவாதத்திற்கு எதிராக இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைக்கு அமெரிக்கா பூரண ஆதரவளிக்கும். விடுதலைப்புலிகளின் ஆயுத விநியோகம், பணப் பரிமாற்றம் உள்ளிட்ட வலயமைப்பை தடுப்பதற்கு அமெரிக்கா பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தொண்டு நிறுவனம் என்ற போர்வையில் இயங்கி புலிகளின் ஆயுத விநியோகத்திற்கு உதவி வந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை தடைசெய்தமை இவற்றுள் முக்கியமானதாகும்.

எந்தவொரு பயங்கரவாத அமைப்புக்கும் மன்னிப்பளிக்க முடியாது. இலங்கையில் தொடர்ந்து செல்லும் கடத்தல்கள், காணாமல் போதல், சட்டவிரோத கைதுகள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் மிகுந்த கவலையளிப்பதாகவுள்ளன.

மனித உரிமை மீறல்களைப் பாதுகாப்பதற்கும் துணை ஆயுதக் குழுக்களின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கும் சிறுவர்கள் படையணிகளில் சேர்க்கப்படுவதை நிறுத்துவதற்கும் இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

அரசாங்கம் நாட்டிலுள்ள சகல மக்களினதும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். அதேவேளை இனப்பிரச்சினைக்குச் சகல இன மக்களினதும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அதிகாரப் பரவலாக்கலின் அடிப்படையிலான அரசியல் தீர்வைக் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ச-5)


வலம்புரி நடத்தும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக் கருத்தரங்கு

முற்றிலும் இலவசம்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துடன் இணைந்து

கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன்

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

நடைபெறும் கருத்தரங்கு

காலம் :- 05 - 06.08.2008 காலை 9 மணி

இடங்கள் :-

- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
- ஜோன்.பொஸ்கோ பாடசாலை
- திருக்குடும்ப கன்னியர் மடம்
- சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம்
- கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்
- வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்
- யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
- யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
- பெரியபுலம் மகா வித்தியாலயம்
- சென்.பெனடிக்ஸ் வித்தியாலயம்
- கல்வியங்காடு இ.த.க.பாடசாலை
- நாயன்மார்கட்டு முத்துத்தம்பி வித்தி.
- கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
- கோண்டாவில் இந்து மகா வித்தி.
- கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்

வலிகாமம் கல்வி வலயத்துடன் இணைந்து

ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸின் அனுசரணையுடன்

நடைபெறும் கருத்தரங்கு

ஸ்ரீலங்காஇன்ஷூவரன்ஸ்

காலம் :- 04.08.2008 காலை 9 மணி
இடம் :- மானிப்பாய் மகளிர் கல்லூரி

காலம் :- 05.08.2008 காலை 9 மணி
இடம் :- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

இக் கருத்தரங்கில் மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெறுக

ஏனைய கல்வி வலயங்களிலும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான கருத்தரங்குகள் நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்படும்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.08.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.